இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 12 | திகதி : 07.09.2025 | விலை : 50.00

## திருவழிபாடு என்பது விண்ணகத் திருஅவையும் மண்ணகத் திருஅவையும் இரண்டற கலக்கும் இடமாகும்.

**- ஆதர் கருதினால் றோஜ்**

வடக்கு – கிழக்கு ஆயர்கள் மன்றத்தின் ஒழுங்குபடுத்தலில் வடக்கு – கிழக்கு குருக்களுக்கான கருத்தமர்வானது கடந்த 02.09.2025 அன்று மடுத் திருப்பதியில் நடைபெற்றது. இக் கருத்தமர்வில் வத்திக்கான் திருவழிபாட்டு ஆணையகத்தின் முதல்வர் ஆதர் கருதினால் றோஜ் அவர்கள் கலந்து சிறப்புரை ஆற்றினார். அவர் தம் உரையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார் :

அவர் வழிபாட்டின் மேன்மை பற்றி மேலும் தெரிவித்தவையாவன:

- வழிபாட்டு உருவாக்கல் தொடர் உருவாக்கலாக வேண்டும்.
- வழிபாடு அறிவைப் பெறுவதற்கானதல்ல, வழிபாடு எமது வாழ்வின் இறை அனுபவம் .
- கட்புலனாகிய, கட்புலனாகாத குழுமங்கள் ஒவ்வொரு வழிபாட்டிலும் பங்கேற்கின்றது. கட்புலனாகாத குழுமத்தின் பங்கேற்பை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.
- வழிபாட்டில் எமது மானுடர்களின் குரலானது வானவர் மற்றும் புனிதர்களின் குரலுடன் இணைகின்றது
- வழிபாட்டு முறைமையானது வெறுமனே கோட்பாடுகள் சார்ந்தது அல்ல மாறாக வழிபாடு சிலுவையில் அறையுண்டு உயிர்த்தெழுந்த இயேசுக்கிறிஸ்துவினுடைய கூர்மையான பார்வை சார்ந்தது.
- திவ்விய நற்கருணை மற்றும் அருளடையாளங்கள் ஆகியன எமது அருள் வாழ்வின் மையமாக உள்ளன
- முதல் ஏவாள் ஆதாமின் விலாவிலிருந்து படைக்கப்பட்டதுபோல திருஅவையாகிய புதிய ஏவாள் ஆண்டவர் இயேசுவிடமிருந்து உதயமாகியது.

இக்கருத்தமர்வில் வடக்கு – கிழக்கு ஆயர் மன்றத்தின் தலைவரும் திருமலை மறை மாவட்ட ஆயருமாகிய பேரருட்கலாநிதி நோயல் இம்மானுவல் ஆண்டகை அவர்களும், மட்டக்களப்பு மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் பேரருட்கலாநிதி அன்ரனி ரஞ்சித் ஆண்டகை அவர்களும், மன்னார் மறைமாவட்டஓய்வு நிலை ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களும், வடக்கு – கிழக்கு மறைமா வட்டங்களின் குருமுதல்வர்களும் அடங்கலாக இருநூறுக்கும் மேற்பட்ட குருக்கள் பங்கேற்றனர்.








## யாழ். மறைமாவட்டத்தில் 2026ம் ஆண்டு சமூக தொடர்பாடல் ஆண்டு

கடந்த வாரம் நடைபெற்ற யாழ் மறைமாவட்டக் குருக்கள் மன்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி எதிர்வரும் 2026ம் ஆண்டை சமூகத் தொடர்பாடல் ஆண்டாக அனுஷ்டிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டில் கூடுதலாக சமூகத் தொடர்பு சாதனங்கள் பற்றிய விழிப்புணர்வை கொணர்வதே இக் கருப்பொருள் தெரிவிக்கும் காரணமாகும். நவீன இலத்திரனியல் சமூகத் தொடர்பு சாதனங்களால் ஏற்படக்கூடிய சமூகத் தீமைகள், பாதிப்புக்கள் பற்றியும் சமூகத் தொடர்பு சாதனங்களை நேரிய முறையில் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றியும் பல்வேறு நிலையினரிடம் பல நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி சமூக, ஆன்மீக விழுமியங்களை இறை மக்கள் மத்தியிலே வழங்கி, அவ்வாண்டு முழுவதும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை ஒழுங்கமைக்குமாறு யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். அடுத்த ஆண்டு (2026) பாதுகாவலன் பத்திரிகை ஆரம்பித்ததன் 150ஆவது நூற்றாண்டு விழா என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## வீதியோரங்களில் ஒலிபெருக்கிப் பாவனை , சுருபமமைத்தல் என்பவற்றில் கட்டுப்பாடு - குருக்கள் மன்றில் தீர்மானம்



யாழ் ஆயர் தலைமையில் யாழ். மறைமாவட்டக் குருக்கள் மன்ற கூட்டம் கடந்த கடந்த 28ஆம் திகதி யாழ். மறை மாவட்ட ஆயர் இல்ல கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 2016ஆம் ஆண்டு யாழ். மறை மாவட்டத்ததில் நடைபெற்ற 'புதிதாய் வாழ்வோம்" மேய்ப்புப்பணி மாநாட்டில் எடுக்கப்பட்ட மிகவும் முக்கியமான தீர்மானங்களிலொன்றான ஆலயத் திருநாட்களின் போது வீதி ஓரங்களில் ஒலி பெருக்கி பாவனை சம்பந்தமான விதி முறைகளைபங்குகளில் இறுக்கமாக கடைப்பிடிக்கும்படி வலியுறுத்தப் பட்டுள்ளது. இக்கூட்டத்தில் வீதியோர ங்களில் சுருபங்கள் அமைத்தல் ஆலயம் தவிர்ந்த இடங்களில் திருப்பலி ஒப்புக்கொடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

யாழ் ஆயர் அவர்கள் தீர்மானிக்கப்பட்ட முடிவுகளை பாரபடசமின்றி இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு அனைத்து பங்குதத்தந்தையரகளுக்கும் பணித்துள்ளார்.

## நெவாட் மீன்வலை உற்பத்தி தொழிற்சாலை கட்டடத்தொகுதி திறப்புவிழா



யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள நெவாட் மீன்வலை உற்பத்தித் தொழிற்சாலையில் புதிதாக அமைக்கப்பட்டு வந்த நிர்வாக கட்டடத்தொகுதி கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் அக்கட்டடத் திறப்புவிழா கடந்த் 29ஆம் திகதி நடைபெற்றது. யாழ். கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநரும் நெவாட் தலைவருமான அருட்தந்தை அலோசியஸ் அன்ரோ டெனிசியஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர் கள் கலந்து புதிய கட்டடத் தொகுதியை ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பிரதீபன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் யாழ். கரித்தாஸ் கியூடெக் நிறுவன முன்னைநாள் இயக்குநர்கள் அருட்தந்தை ஜெயக்குமார் மற்றும் அருட்தந்தை இயூயின் பிரான்சிஸ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டதுடன் யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல் துறைத்தலைவர் கலாநிதி திருமதி சுதர்சினி அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் மற்றும் அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள், நிறுவனப் பணியாளர்களென பலரும் கலந்து கொண்டனர்.

## "தமிழ்வேள்வி 2025" நிகழ்வு



தமிழி அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட பேராசிரியர் கலாநிதி வித்தியானந்தன் நூற்றாண்டு ஞாபகார்த்த "தமிழ்வேள்வி 2025" நிகழ்வு கடந்த 24ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட "கூவர் அரங்கில்" நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் திரு. யோண்சன் ராஜ்குமார் அவர்கள் கூத்துக்கலைக்கு ஆற்றிவரும் பணிளைக் கௌரவித்து 'பேராசிரியர் சு. வித்தியானந்தன் நூற்றாண்டு நினைவு விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார். திரு. ஜோன்சன் ராஜ்குமார் அவர்கள் நாடகக்றகை நெறியின் யாழ்கல்வி வலய ஆசிரிய ஆலோசகராகத் தற்போது பணியாற்றிவருவதுடன் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாடகத் துறையில் ஈடுபாடு கொண்டு 40ற்கும் அதிகமான நாடகங்களை எழுதியும் 100ற்கும் அதிகமான நாடகங்களையும் நெறியாள்கை செய்தும் ஏராளமான நாடகங்களில் முக்கியமான கதாபாத்திமேற்றும் நடித்துள்ளார்.

## சுற்றுலாத் தலமாகக் கச்சதீவை மாற்றுவதை விரும்பவில்லை

**குருமுதல்வர்**

'கச்சதீவு சுற்றுலாத்தலமாக மாற்றப்படுவதை நாங்கள் விரும்பவில்லை", என்று யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி ஜோ. ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்ட சர்வமத பேரவையின் செய்தியாளர் சந்திப்பு நேற்று யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும், "கச்சதீவு சுற்றுலாத்தலம் ஆக்கப்படுவதை நாங்கள் விரும்ப வில்லை. ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வேளை கச்சதீவுக்கும் சென்றுள்ளார் என்பதை நாங்களும் அறிந்திருந்தோம். கச்சதீவை சுற்றுலாத்தலமாக மாற்ற முடியும் என்றொரு கருத்தை ஜனாதிபதி கூறினார் என்றும் அறிகி றோம். ஆனால், உண்மையில் கச்சதீவு புனிதமான தீவு. அங்கு புனித அந்தோனியார் ஆலயம் அமைந்துள்ளது. அங்கு ஒவ்வொரு வருடமும் இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பக்தர்கள் ஒன்றுகூடி புனித அந்தோனியாரின் திருவிழாவை தவக்கால யாத்திரையாக வழிபட்டு வருகிறார்கள். ஆகவே, அது சுற்றுலாத் தலமாக மாற்றப்படுவதை நாங்கள் எந்த விதத்திலும் விரும்ப ☞ ப.2

## மேல் நீதிமன்ற நீதிபதிகளாக இரு கத்தோலிக்கர்கள்





யாழ்ப்பாணத்தில் மாவட்ட நீதிபதிகளாகவும் நீதவான் நீதிமன்ற நீதிபதிகளாகவும் கடமையாற்றிய கௌரவ ஏ.ஏ.ஆனந்தராஜா, அந்தோனிப்பிள்ளை யூட்சன் மற்றும் எஸ். கஜநிதிபாலன் ஆகியோர் மேல் நீதின்ற நீதிபதிகளாக ஜனாதிபதி அனுர குமார் திசநாயக்கா அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிய நீதிபதிகளின் பணிசிறக்க நல்வாழ்த்துக்கள்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

## எமது எண்ணம்

### மக்கள் ஒருமித்த குரலில் செயற்பட வேண்டிய காலம் இது

மக்கள் போராட்டம் என்பது மக்களின் கூட்டு உரிமையாகும். அப் போராட்டம் பல வழிகளில் நடத்தப்படக்கூடியது. அவற்றில் அரசியல் - பொருளாதார உரிமைகள் சார்ந்த விடயம் என்பது பிரதான வகிபாகமாகும்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை 1920 ஆம் ஆண்டு ஆரம்பித்த உரிமைசார் போராட்டம் என்பது 1950 களில் அஹிம்சைப் போராட்டத்துடன் தீவிரம் பெற்றிருந்தது. அக்காலத்தில் ஆரம்பித்த ஜனநாயக வழியிலான அஹிம்சைப் போராட்டம் என்பது ஒருமித்த குரலில் அமைந்திருந்தது.

விமர்சனங்களுக்கு அப்பால், அக்கால அரசியல் தலைவர்கள் எடுத்த கூட்டு முயற்சி ஈழத் தமிழர்களை ஓரணியில் கொண்டு வந்தது. 1949 இல் கட்சி அரசியல் ஈழத்தமிழர்கள் மத்தியில் ஆரம்பித்தாலும், அசாதாரண கட்சி அரசியல் முறைமைகளுக்குள் அடங்கவில்லை.

ஏனெனில் சாதாரண கட்சி அரசியல் செயற்பாடுகள் என்பது அரசில் உள்ள இனம் ஒன்றுக்கு சாத்தியப்படலாம். ஆனால் அரசு அற்ற ஒரு இனமாக ஈழத்தமிழர்கள் நிலை இருந்ததால் குறிப்பாக இலங்கைத்தீவு என்பது 1948 இல் சுதந்திரம் பெற்றதாகக் கூறப்பட்டாலும், ஈழத்தமிழர்களுக்கு அச் சுதந்திரத்தில் பங்கு இருக்கவில்லை.

ஈழத்தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டனர் என்றே சொல்ல வேண்டும். இத்தனைக்கும் பிரித்தானிய அரசுடன் மல்லுக்கட்டி இலங்கைத்தீவுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தது தமிழ் தலைவர்கள் தான். இது சிங்கள மக்களுக்கும் புரியாததால். ஆனால் அரசியல் உரிமைப் பங்கீடுகளின்போது ஐம்பதுக்கு ஐம்பது என சில தமிழ்த் தலைவர்கள் "கோரியபோதும் ஐம்பதுக்கு நாற்பது என்று அப் போதைய சிங்களத் தலைவர்களினால் வாதிடப் பட்டிருந்தது.

இங்கு எழுந்த முரண்பாடு அஹிம்சை வழியில் ஈழத்தமிழர்களைப் போராடத் தூண்டியது. ஆனால்அரசியல்ரீதியில்பிடிவாதமாகநின்றுகொண்ட சிங்களத் தலைவர்கள், இலங்கை அரசு என்ற கட்டமைப்பை மேலும் மேலும் இறுக்கமாகக் கட்டமைத்தனர்.

அக் கட்டமைப்பு 1949 இன அழிப்புக்கு ஏற்ற முறையில் குறிப்பாக வடக்குக் கிழக்குத் தமிழர் பிரதேசங்களை மையப்படுத்திய குடியேற்றங்கள் மரபுரிமை மாற்றங்கள் என்று ஆரம்பித்து ஒட்டு மொத்த ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை என்பதற்கான அங்கீகாரம் முற்றாக தரம் இறங்கியது.

இப் பின்னணியில்தான் அக்காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட அஹிசைப் போராட்டங்கள் மக்களின் கூட்டு உரிமையை வலியுறுத்தியிருந்தன. மக்களும் அக்கால தமிழ் அரசியல் தலைமைகள் சொல்வதைக் கேட்டனர். நம்பினர். அவர்களோடு சேர்ந்து போராடினர்.

1980களில் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த பின்னரும் கூட மக்கள் ஒருமித்த குரலில் செயற்பட்டனர். ஆயுத இயக்கங்களை மக்கள். நம்பினர். ஆயுத இயக்கங்கள் மத்தியில் முரண்பாடுகள் - மோதல்கள் ஏற்பட்ட காலத்திலும் கூட தமது அரசியல் விடுதலைப் பயணம் என்ற இலக்கில் ஒருமித்த குரலில் செயற்பட்டனர்.

புவிசார் அரசியல் - பொருளாதார நோக்கில் ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டம் 2009 மே மாதம் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான சூழலில், ஜனநாயக வழியில் செயற்பட ஆரம்பித்த தமிழ்த் தேசியக் கட்சிகள், ஒருமித்த குரலில் செயற்பட வில்லை என்பது கண்கூடு.

போராட்டம் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான சூழலில் அதாவது இன்று 15 ஆண்டுகள் நிறைவடைந்த பின்னரான சூழலிலும் ஒருமித்த குரலில் செயற்பட இக் கட்சிகள் தயாராக இல்லை. ஆகவே சர்வதேசத்தை நோக்கிய அதுவும் இலங்கை ஒற்றை ஆட்சி அரசின் அநீதிகளை எடுத்துச் சொல்லத் தமிழர்கள் அனைவரும் ஒரு பொதுக் கட்டமைப்பாக செயற்படவேண்டிய காலம் இது. சிவில் சமூக அமைப்புகள் கல்வியாளர்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் ஒன்று கூடிச் சிந்திக்க வேண்டும். ஏற்றத் தாழ்வுகள் படித்தவன் படியாதவன் என்ற வேறுபாடுகள் எதுவும் இன்றி செயற்பட வேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

## துயர் பகிர்கின்றோம்

திருவுளப் பணியாளர் சபையின் இலங்கை மாகாண முதல்வருமாகிய அருட்பணி ம. கொட்வின் கமிலஸ் (சனா) IVD. அடிகளாரின் தந்தை அண்ணாவியார் **அறுக்காஞ்சிப்பிள்ளை மரியதாஸ் (மனோகரன்)** 01/09/2025 காலமாகிவிட்டார். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்பதோடு. அருட்தந்தை அவர்களுக்கும், குடும்பத்தாருக்கும் எமது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

# "இயேசுவின் தாகம் - அன்பு மற்றும் உறவுக்கானது"

### திருத்தந்தை லியோ

அண்மையில் வத்திக்கானில் நம்பிக்கையாளர்களைப் பொதுப் பார்வையாளர் கூட்டத்தில் சந்தித்த திருத்தந்தை லியோ அவர்கள் சிலுவையில் இயேசு கூறிய இறுதி வார்த்தைகளில் ஒன்றான "தாகம்" பற்றி விளக்கியுள்ளார்.

இயேசுவின் தாகம், கொடிய துயரத்தையும் வலி மிகுந்த காயத்தையும் சந்தித்த ஓர் உடலின் "உடலியல் தேவை" மட்டுமல்ல, மாறாக அது ஓர் ஆழமான அன்பின் வெளிப்பாடு. அது உறவு, ஒற்றுமை என்பதை உணர்த்தும் அன்புக்கான ஓர் அடையாளம் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் தனது மனித நிலையின் தேவையை உணர்ந்த இறை மனிதத் தன்மை கொண்ட கடவுளின் அமைதியான அழுகை என்றும், அது அன்பை அடிப்படையாகக் கொண்டதால் பிறருக்கு அன்பைக் கொடுப்பதில் மட்டுமல்ல, அதைப் பெறுவதிலும் தயங்கக்கூடாது என்பதை உணர்த்துவதாகவும் குறிப்பிட்டார்.

இயேசு இத்தாகத்தை வெளிப்படுத்துவதால், மனிதகுலத்திற்கு வாழ்வளிக்கும் தண்ணீரைக் கொடுப்பதற்கும் கடவுளோடு மக்களை இணைப்பதற்கும் அவர் விரும்பினார் எனத் தெரிவித்தார்.

### சுற்றுலாத் தளமாக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. காரணம், புனித தலத்தின் புனிதம் பாது காக்கப்பட வேண்டும் என்பதே.

எனவே, ஜனாதிபதி இந்த விடயமாக யாழ். மறை மாவட்டத்தோடு கலந்துரையாடுவார் என்பது எமது நம்பிக்கை.

ஏனென்றால், கச்சதீவு யாழ். மறை மாவட்டத்தின் கீழ் வருகின்ற பணித் தளமாக இருக்கிறது. அங்கு நடைபெறும் திருநாட்கள் எல்லாவற்றையும் நாங்கள் தான் ஏற்பாடு செய்கிறோம். ஆகவே, இவை பற்றிய இறுதி முடிவுகளை எடுப் பதற்கு முன்பாக ஜனாதிபதி யாழ். மறை மாவட்டத்தின் கருத்துகளைப் பெற்றுக் கொள்வார் என்பது எமது நம்பிக்கை. ஜனாதிபதி கச்சதீவுக்கு சென்றதன் முக் கிய காரணம் என்று நாம் கருதுவது, இந்தியாவின் தமிழ்நாட்டு அரசியல் வாதிகள் கச்சத்தீவு இந்தியாவுக்குச் சொந்தமானது அதனை மீளப் பெற வேண்டும் என்று பிரசாரம் செய்கின்றனர். எனவே, இது இலங்கைக்கு சொந்தமான தீவு, இதை யாருமே உரிமை கோர முடியாது என்பதை வலியுறுத்துவதற் காகவே ஆகும்.

அதனைச் சுற்றுலாத் தலமாக மாற்றுவது என் பது இரண்டாந்தரமானனண ணமாக இருந்தாலும் கச்சதீவு இலங்கைக்குரியது.

அதனை எந்த நாடும் உரிமை கோர முடியாது என்பதைத் தன்னுடைய கால் தடத்தை பதித்து அவர் உறுதிப் படுத்தியிருக்கிறார் என்பதே எமது கருத்து என்றும் கூறினார்.


கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு


புதிய வடிவமைப்பில் மோட்ச பாதை கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு உண்டு. இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட திரு உருவப்படங்கள், திருச் சொரூபங்கள் மற்றும் திருவழிபாட்டுக்குப் பயன்படும் திருப் பண்டங்கள் மலிவு விலையில் கிடைக்கப்பெறும்


## நீங்கா நினைவில் 2ம் ஆண்டு

'நீர் தேர்ந்தெடுத்து உம் அருகில் வைத்துக் கொள்ளும் மனிதர் பேறு பெற்றோர்'

(தி.பா. 65:4)

மலர்வு 17 . 02 . 1943



உதிர்வு 06 . 09 . 2023

அமரர்

**பிலோமினா பொன்னாபரணம் திரவியம்**

வார்த்தை இல்லாத வடிவம்
அளவுகோலே இல்லாத அன்பு
சுயநலம் இல்லாத இதயம்
வெறுப்பைக் காட்டாத முகம்
அன்றி – உங்கள் ஆன்மா அமைதியடைய
ஆண்டவரிடம் வேண்டுகின்றோம்.

உயரப்புலம், ஆனைக்கோட்டை.

என்றும் உங்கள் நினைவுகளோடு
செல்வதி – பெவன்

AD-101

## நீங்கா நினைவில் 1ம் ஆண்டு

பிறப்பு 30 . 07 . 1956



இறப்பு 29 . 08 . 2024

**அமரர். புளோறன்ஸ் விமலா டோமினிக்**

அன்புத் தந்தையே இறைவா!

புளோறன்ஸ் விமலா இவ்வுலகில் வாழ்ந்த போது அவருக்கு நீர் கொடுத்த அருட்கொடைகளுக்காகவும், நன்மைத்தனங்களுக்காகவும் நன்றி கூறுகின்றோம். அவர் இவ்வுலகில் உம்மீது அளவில்லாத அன்பும் விசுவாசமும் கொண்டு வாழ்ந்தது போல விண்ணுலகிலும் முடிவில்லா பேரின்பத்தில் பங்குகொள்ள வரமருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

14/3 கோவில் வீதி
1ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். 0777043823

அவரின் பிரிவால் துயருறும்
கணவன், மகன்,
சகோதர சகோதரிகள்

AD-98

அன்பின் மகிழ்வு

# யாழ் மறைமாவட்டத்திற்குப் பதினொரு பொதுநிலைப் பட்டதாரிகள்

### அறிமுகம்

கடந்த ஆகஸ்ட் எட்டாம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்டத்திலே 87 மாணவர்கள் கிறிஸ்தவ கல்வியில் பட்டதாரிகளாக வெளியேறினார்கள். இவர்களில் சிறப்பாக 11 மாண வர்கள் யாழ் மறை மாவட்டத்திலே இயங்குகின்ற புனித யோசப்வாஸ் இறையியல் கல்லூரியிலிருந்து பட்டப் படிப்பை மேற்கொண்டு பட்டதாரிகளாக வெளியேறியுள்ளார்கள். இந்தப் பட்டப்படிப்பின் மூலம் இவர்கள் தங்கள் விசுவாசத்தைப் பற்றிய அறிவில் தங்களை ஆழப்படுத்தித் தங்கள் ஆளுமையை வளர்த்து எம் இறையியல் கல்லூரியில் இருந்து வெளியேறுவது யாழ்திருஅவைக்கு ஒரு மகிழ்ச்சியான நாளாக அமைகிறது. சிறப்பாக இந்த இறையியல் கல்லூரியானது உரோமாபுரியில் இயங்குகின்ற ஊர்பானியா பல்கலைக் கழகத்தினால் அங்கிகரீக்கப்பட்ட ஒரு பட்டப் படிப்பு என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒரு மிக முக்கியமான அம்சமாக இருக்கிறது. சிறப்பாக ஒரு தூர நோக்கோடு தரிசனப் பார்வையோடு நம்முடைய மறைமாவட்டத்திலே உள்ள குருக்கள், துறவிகள் மாத்திரம் அல்ல பொதுநிலையினரும் இறையியல் கல்வியை கற்கவேண்டும். திருஅவையினுடைய படிப்பினைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். மிகவும் ஆழமான திருஅவையினுடைய பாரம்பரியத்தைப் புரிந்து கொண்டு அதைத் தங்கள் நாளாந்த வாழ்வில் மற்றவரோடு பகிர வேண்டும் என்கின்ற உயர்ந்த நோக்கத்தோடு இந்த இறையியல் கல்லூரியை நிறுவிய எங்கள் அன்புக் கும் மதிப்பிற்குமுரிய யாழ் மறைமாவட்ட முன்னாள் ஆயர் அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவரா இருக்கிறார். தொடர்ந்து எமது தற்போதைய ஆயர் அதிவணக்குத்துக்குரிய யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் ஆக்கமும் ஊக்கமும் தந்து வழி நடத்துகின்றார். இந்த இறையியல் கல்லூரியினுடைய முதலாவது இயக்குநராக இருந்து இந்த ஆயருடைய தரிசனப் பார்வைக்கு உருக்கொடுத்த இந்தக் கல்லூரியினுடைய ஆரம்ப இயக்குனர் அருட்தந்தை இரவிச்சந்திரன் ஆவார். அவருடைய ஆழமான இறையியல் பார்வைகளும் திருஅவை மக்கள் மையப்படுத்த வேண்டும் என்கின்ற முனைப்பு இந்த இறையியல் கல்லூரிக்கு ஓர் ஆழமான அத்திவாரம் இட்டது என்பதை எவரும் மறக்க முடியாது. அதனைத் தொடர்ந்து இந்த இறையியல் கல்லூரியை பொறுப்பையெடுத்து வழிநடத்தியவர் அருட்தந்தை ஜெயரஞ்சன் அடிகளார். அவருடைய காலத்திலே இந்தக் கல்லூரி இன்னும் அதிகமாக வளர்ச்சியைக் கண்டது. அதற்கு அடுத்ததாக அருட்தந்தை ரவிராஜ் அவர்கள் பொறுப்பெடுத்து இந்தக் கல்லூரியை மிகவும் திறமையான முறையிலே வளர்த் திருக்கின்றார். இவர்களின் காலத்திலே தான் இந்தப் பதினொரு பேரும் ஆழமான இறையியில் உருவாக்கத்தை பெற்று இன்று யாழ் மறைமாவட்டம் இப் பட்டதாரிகளை உருவாக்கி மகிழ்கின்றது. அதிலும் ஒரு சிறப்பான அம்சம் என்னவென்றால் இந்தக் கல்லூரியிலே இந்த ஆண்டிலே கல்வி பயின்று வெளியேறுகின்ற மாணவர்களிலே சகோதரி பிறின்ஸ் யுரெக்கா அவர்கள் நாடு முழுவதும் பட்டம் பெற்ற 87 மாணவர்களிலே இரண்டாவது அதியுயர் புள்ளியைப் பெற்று யாழ் மறைமாவட்டத்திற்கு பெருமை சேர்த்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தனை வெற்றிகளுக்கும் பின்னால் நீண்டகாலமாக இறையியல் கல்லூரியின் பதிவாளராகப் பணியாற்றிய திரு.பெனாண்டோ பிரான்சிஸ் பாராட்டப்படி வேண்டியவர்.

திருஅவையில் பொதுநிலையினருக்கான இறையியல் கல்லூரி என்பதும் இறையியல் கல்வி என்பதும் மிகமிக முக்கியமானது. குறிப்பாக இன்றைய காலகட்டத்திலே விசுவாசம் கேள்விக்குறியாக்கப்படுகிறது. விசுவாசம் சரியாகப் புரிந்துணரப்படாமல் இருக்கிறது. இந்தக் காலத்திலே குருக்கள், துறவிகள் மாத்திரம் இந்த விசுவாசத்தைக் கட்டியெழுப்ப முடியாது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பொதுநிலையினரை "உலகில் நான்கு பகுதிகளுக்கும் நற்செய்தியைக் கொண்டு செல்லுகின்ற மேய்ப்புப்பணிச் சீடர்கள்" என அழைக்கிறார். அந்த வகையிலே நம்முடைய இறையியல் கல்லூரியிலே 11 மாணவர்கள் மிகவும் கடினமாக உழைத்து விடா முயற்சியோடு கற்று அவர்கள் இன்று தங்களுடைய கனிகளைத் தங்களுடைய பங்குகளுக்கு எடுத்துச் செல்லுகின்றார்கள். சிறப்பாக இவர்களுடைய பங்களிப்பு நம்முடைய பங்குகளைப் புத்துணர்வு ஊட்டி புத்தூக்கத்தோடு இந்த மறைபரப்புப் பணியைச் செய்ய அவர்கள் புது வலிமையைப் பெற்றிருக்கிறார்கள். இவர்களுடைய இந்த சாதனையானது நமது பங்குகளில் இருக்கிற மற்றைய பிள்ளைகளும் இவர்களைப் பின்பற்றி இந்த இறையியல் கல்லூரியிலே சேர்ந்து படித்து தங்களுடைய குடும்பங்களிலே இந்த விசுவாசத்தை வளர்க்கவும் தங்களுடைய பங்குகளிலே இந்த விசுவாசத்தை மற்றவர்களுக்குப் பரப்பி தங்களது பங்குகளை புத்தூக்கம் உள்ள பங்குகளாக மாற்ற இறைவரம் வேண்டுவோம்.

### திருஅவையில் பொதுநிலையினரின் இறையியல் உருவாக்கத்தின் அவசியம்

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் ஒரு சீடன் ஒரு ஆசிரியன். திருமுழுக்குப் பெற்ற அந்த நேரத்திலிருந்து ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் அரச குருத்துவப் பணியைச் செய்ய அழைக் கப்பட்டிருக்கின்றார்கள். திருஅவையின் மறைக் கல்வி கொள்கை திரட்டு இலக்கங்கள் 897-913 இதை எங்களுக்குத் தெளிவாக எடுத்தியம்புகிறது. அதாவது திருமுழுக்கின் மூலம் இயேசுவினுடைய மூன்று முக்கிய பணிகளிலே பொதுநிலையினராகப் பங்கு பற்றுகின்றோம். புனித பேதுரு எங்களுக்கு இவ்வாறு நினைவுபடுத்துகின்றார்: "நீங்கள் எதிர்நோக்கி இருப்பதைக் குறித்து யாராவது விளக்கம் கேட்டால் விடையளிக்க நீங்கள் எப்பொழுதும் ஆயத்தமாய் இருங்கள்" (1பேதுரு 3:15). ஆகவே இறையியல் உருவாக்கம் என்பது பொதுநிலையினருக்கு முக்கியமான அழைப்பாகும். அதாவது பொது நிலையினர் இந்தப் பணியைச் செய்ய அழைக்கப்படுகிறார்கள். சிறப்பாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2017ம் ஆண்டு கூறிய வார்த்தைகள் "சவால்களைச் சந்திக்கத் தயங்காமல், தவறுகளுக்கு அஞ்சாமல், சமூகத்தில் இயேசுவின் அன்பைச் சாட்சி செய்ய முனைவதே இன்றைய திருஅவைக்கு மிகவும் அவசியம்." புனித சியன்னாவின் கத்தரினா பொதுநிலையினருக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக விளங்குகிறார். அவர் ஒரு சாதாரண பொதுநிலையினராக வாழ்ந்தாலும், தனது தீவிரமான படிப்பின் மூலம், ஆழமான ஜெபவாழ்க்கையின் மூலம், உயிருடனான நம்பிக்கையின் மூலம், திருஅவையில் "மறைவல்லுநர்" என்று அழைக்கப்படும் அளவிற்கு தன் இறையியல் அறிவில் வளர்ச்சி பெற்றார். அவரது மறையறிவும், ஆன்மீக அனுபவமும் பல திருத்தந்தையர்களையும் வழிநடத்தின. அதேபோல், பல அரசர்களையும் ஆளுநர்களையும் அவர் தன் அறிவின் ஆழத்தால் வழிநடத்தியது வரலாற்று சாட்சியாக உள்ளது.

33

எனவே பொதுநிலையினரின் இறையியல் உருவாக்கமும், அவர்களின் விசுவாசமுள்ள வாழ்க்கையும் திருச்சபையை ஆழமாகப் பாதித்து மாற்றக்கூடியது. புனித சியன்னாவின் கத்தரினாவின் வாழ்வு இதற்கான உயிரோட்டமான எடுத்துக்காட்டு. பொதுநிலையினர், தனது வாழ்வில் ஆழமான இறையியல் அறிவைப் பெற்று, ஜெபவாழ்வில் ஊன்றியிருந்து, ஆரோக்கியமான விசுவாசத்தைக் கொண்டிருந்தால், அவர் திருச்சபைக்கும், தான் வாழும் சமூகத்திற்கும், மறைமாவட்டத்திற்கும் உயிரூட்டமுள்ள கருவியாக மாறமுடியும் என்பதை கத்தரினாவின் வாழ்வு நமக்கு எடுத்துக்காட்டுகிறது. அதனால் தான், எம் மறைமாவட்டங்களிலும், பொதுநிலையினர், இந்த இறையியல் கல்லூரிகளில் சேர்ந்து இறையறிவைப் பெறுவது, திருச்சபைக்கு அவர்கள் தரும் மிகப் பெரிய உதவியாகும். இன்று இறையியல் கற்றுப் பட்டம் பெற்ற பதினொரு மாணவர்களின் வாழ்வே இதை எங்களுக்கு சாட்சியமாக அறிவித்து நிற்கிறது.

### உலகத்தின் சவால்களைச் சந்திக்கக் கூடிய ஒரு விசுவாசத்தைக் கட்டியெழுப்புவதன் முக்கியம்

இன்றைய காலத்தில் விசுவாசம் அடிக்கடி கேள்விக்குறியாகிறது. இன்றைய உலகின் பல சவால்கள் இந்தப் புனிதமான விசுவாசத்தை சவாலுக்கு உட்படுத்துகின்றன. குறிப்பாக, தொழில்நுட்ப வளர்ச்சியும், சமூக ஊடக சாதனங்களும் மனிதர்களின் நேரத்தையும் கவனத்தையும் அதிகமாகக் கவர்ந்து கொள்கின்றன. இந்த ஊடகங்கள் வழியாக பல தவறான விழுமியங்கள் பரப்பப்படுகின்றன. இத்தகைய சூழலில் விசுவாச உருவாக்கம் மிக அவசியமானதாகிறது.

விசுவாச உருவாக்கம் என்பது வெறும் மதப் பழக்கவழக்கங்களோ, வெளிப்படையான சடங்குகளோ அல்ல. அது, உலகம் எங்களுக்குத் தரும் பிழையான மதிப்புகளை அடையாளம் கண்டு, அவற்றுக்கு அடிமையாகாமல், நமது வாழ்வில் கிறிஸ்தவத்தின் உண்மையான மதிப்புகளை நிறுவுவதையே குறிக்கிறது. புனித பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகம் (12:2) இதனை மிகவும் அழகாகச் சொல்லுகிறது: "இந்த உலகின் போக்கின்படி நடக்காமல், உங்களுடைய மனங்களைப் புதுப்பித்துக்கொண்டு மாற்றப்படுங்கள்." அதாவது, கிறிஸ்தவ விசுவாசி தன் மனமும் உள்ளமும் நற்செய்தியால் புதுப்பிக்கப்பட்டவராக இருக்க வேண்டும். உலகின் பழக்க வழக்கங்களும், நவீன சவால்களும், தவறான மதிப்புகளும் எங்களை இழுத்துச் செல்லாமல், கடவுளின் வார்த்தையால் நமது உள்ளம் வழிநடத்தப்பட வேண்டும் என்பதே இந்தப் போதனை.

இதற்காக, விசுவாசத்தை ஆழமாக அறிந்து கொண்டு, அதனை வாழ்க்கையில் வெளிப்படுத்தும் பொது நிலையினர் திருஅவையில் மிகவும் அவசியமானவர்கள். புனித இரண்டாம் யோவான் பவுல் கூறியபடி: "சரியாக அறியப்படாத விசுவாசம் முழுமையாக வாழப்படமுடியாது." எனவே, விசுவாசம் புத்தக அறிவாக மட்டும் இல்லாமல், நன்றாகப் புரிந்துகொள்ளப்பட்டு, வாழ்க்கையில் நடைமுறையாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும். அப்பொழுது தான் அது நமது வாழ்க்கையில் முழுமையாக வாழக் கூடியதாகிறது.

ஆகவே, இந்த விசுவாசத்தை அறிவிக்கவும், அதை ஆழமாகப் புரிந்துகொள்ளவும் இறையியல் கல்வி பொதுநிலையினருக்கு மிக முக்கியமானதாகிறது. இறையியல் அறிவைப் பெற்ற ஒரு தாய் தன்னுடைய அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்துகொள்கிறார்: "இறையியல் கல்லூரியில் கல்வி கற்றதின் பிறகு, என் குடும்பத்தில் என் பிள்ளைகள் என்னிடம் பல கேள்விகளை குறிப்பாக, இன்றைய காலத்தில் காணப்படும் ஒழுக்கவியல் சவால்கள், விஞ்ஞான முன்னேற்றங்களால் எழும் கேள்விகள் போன்றவற்றில், நான் தெளிவான சிந்தனையுடன் அவர்களுக்கு மறுமொழி அளிக்க முடிகிறது. அதன் அடிப்படைக் காரணம் என் வாழ்வில் நான் பெற்ற இறையியல் அறிவே." ஒரு தாய் அல்லது தந்தை இறையியல் அறிவைப் பெற்றால், குடும்பத்திலோ சமூகத்திலோ கேட்கப்படும் விசுவாசம் சார்ந்த கேள்விகளுக்கு சரியான விளக்கம் அளிக்க முடியும். இதன் விளைவாக, பிள்ளைகளின் மனம் உலகின் போக்கின்படி சிதறாமல், புதுப்பிக்கப்பட்ட மனதோடு வாழ்வைப் பயணிக்க உதவு கிறது. எனவே, இறையியல் கல்வி என்பது வெறும் அறிவியல் பயிற்சி அல்ல. அது மனித மனதை மாற்றி, புதுப்பித்து, பிறரின் மனங்களையும் புதுப்பிக்கச் செய்கின்ற ஒரு உயிரூட்டும் கருவியாகும். இதுவே அதன் மிக முக்கியமான உண்மை.

### குருக்கள் பொதுநிலையினருக்குமான உறவை இறையியல் அறிவு வளர்க்கிறது

திருஅவை என்பது பல்வேறு அழைப்புகளின் சங்கமமாகும். அதாவது, பொதுநிலையினரும் திரு நிலையினரும் ஒன்றிணைந்து பணியாற்றும் சமூகமாகும். திருத்தூதர்பணியின் 18-ஆவது அதிகாரத்தில் பிரிஸ்கில்லா மற்றும் அகுலா என்ற பொதுநிலைத் தம்பதிகள், புனித பவுலோடு இணைந்து திருச்சபைக்கு அழகாக சேவை செய்ததை நாம் பார்க்கிறோம்.

இன்றைய பங்குகளிலும், திருநிலையினருடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றி, பங்குகளை உயிரூட்டமாக வைத்திருக்கும் பொதுநிலையினரைக் காணலாம். இவ்வாறு உருவாக்கப்படவேண்டிய பொது நிலையினரின் முக்கியத்துவத்தை 16-ஆவது பெனடிக்ட் அவர்கள் 2009ஆம் ஆண்டு வலியுறுத்தினார்: "எந்த அளவுக்கு பொதுநிலையினர் உருவாக்கப்படுகிறார்களோ, அந்த அளவுக்கு அவர்கள் திருநிலையினருடன் சேர்ந்து திருச்சபையின் பணிகளில் அழகாக ஈடுபடுகிறார்கள்." எங்கள் மறைமாவட்டத்திலும் பல பொதுநிலையினரும், மறையாசிரியர்களும், அர்ப்பணிப்போடு சேவை செய்து வருகின்றனர். அவர்கள் இறையியல் கல்லூரிகளில் கல்வி கற்கும்போது, மூன்று ஆண்டுகளில் பட்டப்படிப்பு பெறுவதோடு மட்டுமல்லாமல், பங்குகளில் உயிரூட்டமுள்ள பணியாளர்களாகவும், திருநிலையினருடன் இணைந்து திருச்சபைக்கு சேவை செய்வோராகவும் மாறுகிறார்கள். இன்று, யாழ் மறைமாவட்டத்தில் உள்ள இறையியல் கல்லூரியிலிருந்து 11 பட்டதாரிகள் தங்களது பட்டப்படிப்பை பெருமிதத்தோடு நிறைவு செய்து, தங்களது பங்குகளில் பணியைத் தொடங்குகிறார்கள். இது, இறையியல் பட்டப் படிப்பு குருக்கள் மற்றும் துறவிகளுக்கு மட்டுமல்லாமல், பொதுநிலையினருக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற திருச்சபையின் உயரிய சிந்தனையின் சான்றாகும்.

### நன்றி மற்றும் வாழ்த்துகள்

இந்தக் கல்லூரியை உருவாக்கிய முன்னாள் யாழ் ஆயருக்கும், சிறப்பாக வழிநடத்தும் இன்னாள் ஆயருக்கும் கடினமான சூழல்களிலும் சேவை செய்த இயக்குநர்களுக்கும், எதுவித எதிர்பாரப்பும்

(தொடர்ச்சி 05ம் பக்)

அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

# “உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்”

(லூக் 1:38)



**இஸ்ராயேலின் வீர மங்கை**

தந்தையாகிய இறைவன் உலகைப் புதிய படைப்பாக மாற்றுவதற்கான திட்டத்தை தொடக்கி வைத்தவர் அன்னை மரியா. எனவே அவரை அனைத்து வரங்களாலும் அலங்கரித்து வரங்களின் அரசியாகவே படைத்து மாசணுகாமல் அன்னாவின் வயிற்றில் கருவுறச் செய்து மாபெருங் கொடையாக உலகின் முழுமானிட விடுதலைக்காக இறைவன் வழங்கினார். மூவொரு கடவுள் செதுக்கி உருவாக்கிய புதிய படைப்பு அன்னை மரியா. தந்தை இறைவனைத் தன் வாழ்வால், தனது சிந்தனையால் எவ்வாறெல் லாம் எப்போதெல்லாம் மகிழ்வுறச் செய்து மகிமைப்படுத் தலாம் என்ற உணர்வில் வாழ்ந்த மரியாவையே தனது மகனுக்குத் தாயாகத் தேர்ந்தெடுக்க, உலகப் படைப் பின் முன்பே திட்டமிட்டார் இறைவன். அனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள இறைவனின் நிகழ்ச்சி நிரல்களுக்கு எவரும் ஒருபோதும் திட்டமிட முடியாது என்று உணர்ந்த மரியன்னை, அவரது திட்டம் நிறை வேற அவரது திருவுளத்தை அறியுமாறு, இஸ்ராயேல் குலத்தின் வீர மகளாக முன்னோரின் மீட்பருக்கான ஏக்கப் பெருமூச்சுக்களைத் தானே சுமந்தவளாக, செபத்தில் இடைவிடாமல் நிலைத்திருந்தாள்.

**அதிசயத்தின் சிற்ப ஆசாரி**

இவ்விதமாக வீரப் பெண்களாகச் சாதனை படைத்த யூதித்து, எஸ்தர் போன்று இஸ்ராயேலின் செல்வியாக அக்குலத்தின் பெருமையாகப் பல்வேறு அணிகளால் அலங்கரிக்கப்பட்டுத் தாயின் கருவில் உருவாகுமுன்பே, பின்னர் நிகழப்போகும் பாஸ்கா மறை பொருளின் இரத்தத்தால் புனிதப்படுத்தப்பட்ட மரியா வின் முன்னிலையில், தனது கபிரியேல் தூதன் மூலம் தாழ்ந்து பணிந்து, தனது மகனுக்குத் தாயாக வருவாயா என்று கெஞ்சிக் கேட்கின்றார் இறைவன். அவ்வளவு தூரம் நற்பேறுபெற்றவர் அன்னை மரியா. அவர் வழங்கிய நிபந்தனையற்ற பிளவுபடாத மனதுடனான முழுமனச் சுதந்திரத்துடன், இயேசுவைக் கொடையாகக் கொடுத்துக் கருவுறச் செய்து அன்னை மரியாவை முதல் நற்கருணைப் பேழையாக்கினார் மூவொரு கடவுள். இவ்வாறு தந்தை இறைவன் மரியாவிடமிருந்து சம்மதம் பெற்றவேளை, தன்னுடைய எலும்பு, தசை, இரத்தம், நாடி, நரம்புகளையே தானறியாமல் வழங்கி, இறை மகன் இயேசு தன்னிடம் உருவாகத் தன்னையே மரியா உருகளித்தார். இவ்வாறு எமது ஆலயங்களில் எலும்பு, சதை, இரத்தம், நாடி, நரம்புகளுடன் பேழைகளில் உண்மையாகப் பிரசன்னமாக இருந்து (லூக் 24:39) அதேவிதமாக மாதமொரு தடவை பாவ அறிக்கை செய்யாமல் துரோகிகளாக இருக்கும் எமது நாக்கிலும் நெஞ்சிலும் மிகுந்த தாழ்ச்சியுடன் வருகின்றார். இந்த உலகிற்கு அப்பாற்பட்டதோர் பிரபஞ்ச ஆன்மீக மறைபொரு ளின் அற்புதத்தை நிகழ்த்திய சிற்ப ஆசாரி, உலகம் தோன்றமுன் இருந்த முடிவில்லா மௌனத்தில் கரைந்து உறைந்திருந்த தூய ஆவியாரேயாவார்.

**இவ்வுலகம் கடந்த வாழ்வு**

இவ்வாறு மூவொரு கடவுளால் செதுக்கப்பட்ட அனைத்து வரங்களின் பெண்ணாகிய, நற்கருணைப் பேழை அன்னை மரியாவின், பிரபஞ்ச ஆன்மீக வாழ்வே இவ்வரிய பெறுபேற்றினைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவராக அவரை ஆக்கியது. அனைத்தையும் கடந்த நிலையில் இருக்கின்ற அனைத்தின் உள்ளும் வாழ்கின்ற இறை இயல்பு நிலை ஆன்மீகத்தையே பிரபஞ்ச ஆன்மீகமாகக் கொண்டிருந்தவர் நம் அன்னை.

பிரபஞ்ச ஆன்மீகம் என்பதைச் சுருக்கமாகச் சொல்வதாயின் நாம் இவ்வுலகிற்குள் இருந்தாலும் இவ்வுலகம் கடந்து சிந்தித்துச் செயலாற்றி வாழ்வதாகும். யூத வரலாற்றில் பிறந்து வாழ்ந்து தனது இஸ்ராயேல் குலத்தின் சமய மரபின் சட்டங்களை மதித்தாலும் அதற்கு அப்பால் அனைத்தையும் கடந்த சிந்தனையோடு ஓர் பிரபஞ்ச ஆன்மீகப் பெண்ணாக வாழ்ந்தார் என்பதையே அவர் தனது “என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்று கின்றது” என்ற புரட்சிப் பாடல் மூலம் வெளிப்படுத்தினார். ஓர் சமூகப் புரட்சி சார்ந்த, 147 ஆம் திருப்பாடலில் வரும் கருத்துக்களைக் கொண்டிருக்கும் அதேவேளை மூவொரு இறைவன் மரியாவின் வாழ்வில் செய்த மாபெரும் அற்பு தச் செயல்களை வெளிப்படுத்தியதாக அமைகின்றது.

**ஆவியில் மகிழ்ந்த பெண்கள்**

மாபெரும் சந்திப்பு நிகழ்வில் எழுந்த இப்பாடல் தாங்கள் இருவரும் கருவுற்றிருப்பது தங்களுக்கே தெரி யாத நிலையில் திருமுழுக்கு யோவான் எலிசபெத்தின் வயிற்றில் துள்ளிய சம்பவமே தான் மீட்பரைச் சுமந்து வந்திருக்கிறேன் என்பதை அன்னை மரியாவுக்கும், மீட்பரின் முன்னோடியைத் தன் வயிற்றில் கொண்டி ருக்கிறேன் என்பதை எலிசபெத்திற்கும் உணர்த்தியது. தனது கருவுறும் வளமை நின்றிருந்த எலிசபெத்தின் வயிற்றில் குழந்தை இருப்பது மரியாவின் வாழ்த்தொலி கேட்கும் வரைக்கும் தெரியவில்லை. அது போன்று “என் ஆண்டவரின் தாய் பேறுபெற்றவரே” என்ற வாழ்த்துரை ஒலித்த போதுதான் தன் வயிற்றில் இயேசு ஏற்கெனவே கருவாகியிருக்கிறார் என்பதை அறிந்துகொண்டார் மரியா. எனவேதான் தூய ஆவியால் நிறைவுபெற்ற பெண்கள் இருவர் இணைந்து இறைபுகழ் பாடியதன் தொடர்ச்சியே “என் ஆன்மா” வாகும். மூவொரு கடவுள் ஒரு புள்ளியாக அதாவது நிகழ்காலத்தில் வாழ்பவராகவே இருக்கின்றார். கடந்த காலமும் வருங்காலமும் அவருக்கு ஒன்றேதான். அனைத்தையும் அறிபவராக, அனைத்தி லும் அனைத்து வல்லமையுடன் செயற்படுபவராகவே அவர் இருக்கின்றார். “காயமே இது பொய்யடா - வெறுங் காற்றடைத்த பையடா” என்ற எமது வாழ்வின் மாயை மற்றும் இல்லாமை, நிலையாமை, இயலாமை, ஒவ் வாமையை எமக்கு நாளாந்தம் உணர்த்தி நிகழ்காலத் தில் மட்டும் வாழும்படி இறைவன் எம்மை அழைக்கின் றார். இவ்வாறு நிகழ்காலத்தில் வாழ்ந்த பிரபஞ்ச ஆன் மீகத்தின் பெண்ணாகவே எமக்கு மரியன்னை தரப்பட்டிருக்கின்றார்.

**சுயநலக் கோரப் பிடிகள்**

‘வெறுங் காற்றடைத்த பைகளாக’ வாழ்ந்து கொண்டிருக்கும் நாமனைவரும் இப்பிரபஞ்சத்தில் இடம் பெறுகின்ற பல்லாயிரக்கணக்கான பால் வெளிகளுள் சுற்றிச் சுழல்கின்ற பல்லாயிரக்கணக்கான சூரியக் குடும் பங்களுள் அமைந்துள்ள ஒன்பது கோள்கள் கொண்ட ஒரு சூரியக் குடும்பத்தின் பல்லாயிரக்கணக்கான அதிசயங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் ஒரு பூமிப்பந்தின்மேல் எங்கோ ஒரு மூலையில் தலைகீழாக நின்று அகங்காரம், ஆணவம், தலைக்கனம், தற்பெரு மையுடன் மார்தட்டித் தம்பட்டம் அடிக்கின்றோம். பல் வேறு இறுமாப்புகளுடனும் பணக்காரச் செருக்குடனும் வறுமையின் கோரப் பிடிக்குள் அகப்பட்டதால் விளைந்த அவநம்பிக்கை, மனக்கடினம், சுயநலம், அறியாமையுட னும் பணம், பட்டம், பதவி, புகழ், பொன்னாடை, மாலை களுக்காய் அலைந்து திரிந்து இறைவன் ஒருவருக்கே கொடுக்கவேண்டிய மகிமையை நாள்தோறும் எமதாக் கிக்கொள்கின்றோம். ‘தன்வினை தன்னைச்சுடும்’ என்ற- தற்கிணங்க நாமே ஏற்படுத்திக்கொண்ட, சர்வதேச பூகோளமயமாக்கல் மற்றும் இயந்திரமய, இணைய வலைப்பின்னல் வாழ்க்கைக்குள் நாமே அகப்பட்டுச் சிக்கிச் சிதறிச் சின்னாபின்னமாகி மனநோயாளர்க ளாக மாறிவிட்டோம். எந்தவொரு நோயாளியையும் முற்றுமுழுதாகக் குணமாக்க முடியாத கையாலாகாத் தன்மை கொண்டவர்களின் பின்னால், பணம் உழைப் பதையே நோக்கமாகக் கொண்ட, மக்களை மாக்களாக மிதிக்கின்ற மருத்துவ மாஃபியாக்களின் புதிய புதிய மாடிக் கட்டடங்களுக்குள் மாதம் மாதம் கிளினிக் காட்டுகளுடன் அலைகின்றோம். இவ்வாறு கடந்த காலக் கவலைகள் வருங்காலப் பயங்களுக்குள் மாண்டுவிட்டவர்களாக நிகழ் காலத்தில் வாழச் சக்தியற்றவர்களாய் காலை முதல் மாலைவரை அருகே வாழ்பவர்களில் அக்கறை காட்டக் கூட நேரமின்றி, நிம்மதியற்று ஓடியாடித் திரிகின்றோம்.

**பரிதாப எதிர்காலம்**

பிறந்து இறந்தவர்கள், இறப்பதற்காகப் பிறந்தி ருப்பவர்கள், வருங்காலத்தில் பிறக்கப் போகின்ற கோடிக் கணக்கானவர்கள் மத்தியில் என்னையும் இந்தக் கண், காது, மூக்குடன் ஓர் அதிசய பிம்பமாக இவ்வுலக அற்புதங்கள் மத்தியில் படைத்து, உத்தரிக்கும் ஸ்தல ஆன்மாக்களின் மீட்பிற்கும் இவ்வுலகிற்குள் வாழ்ந்து பாவக்கடலாக அழகிய உலகை மாற்றிக் கொண்டிருக் கும் எண்ணற்ற பாவிகளின் மனமாற்றத்திற்கும் தம்முடன் துன்புற்று ஒத்துழைக்கும்படி அழைக்கின்றார் இறைவன். இவ்வாறு அவர் எம்மை இவ்வுலகிற்குள் கொண்டு வந்த அற்புதமான வியத்தகு மகிமையை சிந்தித்து நன்றி சொல்லக்கூட நேரமில்லாதவர்களாக அலைகின்றோம். “ஆடியடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா” என்ற எமது வாழ்வின் சூனியத்தையும் தான் எம்மில் படைத்த ஆன்மாவின் நிரந்தரமான தன்மையையும் அன்றாடம் பல்வேறு நிகழ்வுகளூடாகச் சுட்டிக்காட்டும் இறைவன், எம்மையே எப்போதும் உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் நாமோ அவரைக் கண்டுணர முடியாதவர்களாக அனைத்து அவலங்களாலும் ஆட் கொள்ளப்பட்டு ‘நேரத்தையே’ உற்றுப் பார்த்துப் பரபரத்துப் பதைபதைத்துக் கொண்டிருக்கிறோம். பிறக்கும் போது தூய்மையாக அனைத்தையும் இலகுவில் கிரகிக்கக்கூடிய சுறுசுறுப்பான தெள்ளத் தெளிவான மனங்களோடு பி- றந்தாலும், முன்னோர்வழி பரம்பரை பரம்பரையாகச் சேகரிக்கப்பட்டு நம்மோடு வாழ்பவர்களின் சொல், செயல், சிந்தனையால் செதுக்கப்படுகின்றோம். இவ்வாறு நமக்குள் குப்பை கூளங்களாகக் குவிக்கப்பட்ட பல்வேறு ஏற்றத் தாழ்வுகள், குணாதிசயங்கள் காரணமாக எம்மில் நாம் கொண்டிருக்கும், பாவங்கள், காயங்கள், மனவருத்தங் கள், விழுப்புண்களால் எம்மையே நாம் நொந்து கொண்டு பாவப்பட்ட பரிதாபத்திற்குள்ளான சமூகமாக, எதிர்கால சந்ததிக்குரிய அவலமான வாழ்வை எம்மையறியாமல் கட்டி எழுப்பிக் கொண்டிருக்கிறோம்.

**அருட்பணி. கு. யே. அன்ரனிபாலா**

> **எம்மைக் கட்டிப் போட்டுள்ள சமய, சடங்காசார, அமைப்பு ரீதியான சட்டதிட்டங்களுக்குள்ளும், கலை, கலாசார, கல்வி, விளையாட்டு, அரசியல், பொருளாதார அவசரங்கள் அவலங்களுக்குள்ளும் அகப்பட்டுவிடாமல் மேலெழுந்து நிரந்தமானவரைப் பற்றிக்கொண்டு அவரது திட்டத்தின் படியான திருவுளத்தை பிரபஞ்சத்தில் இறைவன் தூவிவிட்ட அற்புத, அதிசய சக்திகளை செபத்- தின் மூலம் இனங்கண்டு, எமது உடல், உயிர், ஆன்மாவில் பெற்றுக் கொண்டு வாழ முற்படுவோம்.**

**மாபெரும் மௌனம்**

இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் எம்மைக் கட்டிப் போட்டுள்ள சமய, சடங்காசார, அமைப்பு ரீதியான சட்டதிட்டங்களுக்குள்ளும், கலை, கலாசார, கல்வி, விளை யாட்டு, அரசியல், பொருளாதார அவசரங்கள் அவலங் களுக்குள்ளும் அகப்பட்டுவிடாமல் மேலெழுந்து நிரந்தர மானவரைப் பற்றிக்கொண்டு அவரது திட்டத்தின் படியான திருவுளத்தைப் பிரபஞ்சத்தில் இறைவன் தூவி விட்ட அற்புத, அதிசய சக்திகளை செபத்தின் மூலம் இனங்கண்டு, எமது உடல், உயிர், ஆன்மாவில் பெற்றுக் கொண்டு வாழ முற்படுவோம். இதை வாழ்ந்து காட்டியவர் அன்னைமரியா. யூதமரபில் பிறந்தாலும் உலகம் படைக் கப்படு முன்பு இருந்த மாபெரும் மௌனத்தைத் தனதாக்கி இப்பிரபஞ்சத்தில் காணப்படும் அளப்பரிய சக்தியோட்டத் தைத் தன் உள்ளத்தில் செபத்தின் மூலம் கண்டுணர்ந்து வாழ்ந்தார். ஏனெனில் செபத்திற்கு அடிப்படை தவம் என அறிந்திருந்தார். அமைதியையல்ல மாறாக மௌனத்தைக் கடைப்பிடிப்பதே தவம். இறைபுகழ் பாடவிடாமல் சாத்தான் ஏற்படுத்தும் பரபரப்பிற்கு மத்தியில் இல்லறத்தோர் கூடத் தவத்தைக் கடைப்பிடிக்க முடியும். தேவையில்லாமல் கதைக்காமலும் உண்ணாமலும் இருத்தல், தேவையற்ற- தற்குச் செவிமடுக்காமல் (மூடி இல்லாத காதில் அனைத்- தும் தாமாக வந்து விழும்) இருத்தல். தேவையற்றதைப் பார்க்காமல் (மூடியைக் கொண்டுள்ள கண்ணின் பார்வை வெளிச் சென்று பார்க்கும்) இருத்தல், தேவையற்றதைத் தொடாமல் அதாவது பயன்படுத்தாமல் இருத்தல், தேவை யற்றதை நுகராமல் அதாவது ஆசைப்படாமல் இருத்தல் என்னும் ஐந்து விடயங்களையும் கடைப்பிடிப்பதே மாபெரும் மௌனத்தை எம்முள் உருவாக்கும் நோன்பாகும்.

**பீடத்தின்முன் மௌனமாகும் மரியன்னை**

இத்தவமே ஆழ்மன செபத்திற்கு வழிவகுக்கும். இவ்வாறு போலிகள், மாயைகளை விட்டகன்று உண்மை யான, நிரந்தரமான இறையதிசயங்கள் அற்புதங்கள் வெளிப்படுகின்ற ஆன்மீகத்தை மரியன்னை வாழ்ந்தது போன்று, நாமும் வாழவே இறைவன் எம்மை அழைக் கின்றார். இவ்வுலகில் வாழும் இறுதி மனிதன் பாவம் செய்யும்வரை ஒவ்வொரு செக்கனும் உலகில் உள்ள கோடிக்கணக்கான பீடங்களில் எம்கண்கள் காணா வகையில் இரத்தம் சிந்தித் தன்னையே தந்தைக்குத் தூய ஆவியில் இயேசு பலியாக்கும் வேளை பீடத்தைச் சுற்றிப் புனிதர்களும் வானதூதர்களும் புடைசூழக் குருவின் புனிதமான கரங்களில் இடம்பெறுகின்ற, விண்ணகத்தில் இடம்பெறாத இந்த அதிசயத்தைப் பீடத்தின்முன் முழந்- தாழிட்டு ஆராதிக்கும் அன்னை மரியாவின் பிரபஞ்ச ஆன் மீகம் எமக்கும் ஓர் அடிப்படையான பாடமாக அமையட் டும். தொடக்கத்தில் ஒன்றுமில்லாமையில் நிலவிய மாபெரும் மௌனம் அன்னையை ஆட்கொண்டதுபோல் எம் அனைவரின் மனங்களையும் ஆட்கொள்ளட்டும்.

# எமது மீட்புக்கு வழிகோலிய கன்னிமரியாவின் பிறப்பு



**முகவுரை**

கத்தோலிக்க திருஅவையிலே மூன்று பேருக்குப் பிறப்பு விழாக் கொண்டாடப்படுகின்றது. புனித கன்னி மரியாவின் பிறப்பு விழா புரட்டாதி மாதம் 8ம் திகதியும், புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு விழா யூன் 24ம் திகதியும், இறைமகன் இயேசுவின் பிறப்பு விழா மார்கழி மாதம் 25ம் திகதியும் கொண்டாடப் படுகின்றன. புனித கன்னி மரியாவின் பிறப்பு விழாவை நாம் பெருமகிழ்வோடு கொண்டாடுகின் றோம். என்றும் புனிதையாகவும், இறைவனின் தாயாகவும், எமது தாயாகவும் இருக்கும் புனித கன்னிமரியாள் சென்ம மாசணுகாத கன்னியாக இவ்வுலகில் பிறக்கின்றாள். இறைவன் தன் மீட்புத் திட்டத்துக்காக புனித மரியாவைத் தேர்ந்தெடுத்து இறுதி வரை அவளை புனிதமாகப் பாதுகாக்கின்றார். பாலகனைக் கருவிலே தாங்க முன்னும் கன்னியாக இருந்தாள். பாலகனை உதரத்திலே தாங்கி இருக்கும்போதும் கன்னியாக இருந்தாள். பாலகனைப் பெற்றெடுத்த பின்னும் கன்னியாக இருந்தாள். அதனால் தான் அவளின் பிறப்பு திருஅவைக்கு பெருமை சேர்க்கும் ஒரு நிகழ்வாக அமைகின்றது.

**கன்னிமரியாவின் பெற்றோர்**

புனித கன்னிமரியாவின் பெற்றோரான சுவக்கின் அன்னம்மா தம்பதிகள் இருவரும் திரு-அவையில் புனிதர்களாகப் போற்றப்படுகிறார்கள். இவர்களுடைய பெருவிழா யூலை மாதம் 26ம் திகதி கொண்டாடப்படுகிறது. மரியாவின் பெற்றோர்கள் இறைவனுக்குகந்த புனித வாழ்வு வாழ்ந்தார்கள். இறைவன் பார்வையிலே புனிதையான, இறைவனின் தாயான மரியாவைப் பெற்றெடுத்து உருவாக்கத் தகுதியானவர்களாகக் காணப்பட்டார்கள். தங்களின் மாசற்ற புனித வாழ்க்கையின் பெரும் கொடையாக மரியாவை இவ்வுலகிற்குத் தந்தார்கள். இவர்கள் கன்னிமரியாவின் அன்புப் பெற்றோராக இருந்து முழுமையாகத் தங்களுடைய மகளை இறைவனுக் குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த கடவுளின் மீட்புத் திட்டத்துக்கு அர்ப்பணம் செய்து, கன்னிமைக்குப் பழுதில்லாமல் வளர்த்தமையால் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டார்கள்.

**மனித மீட்பின் மாணிக்கம் கன்னிமரியா**

புனித கன்னிமரியா மனித மீட்பின் மாணிக்க மாக இவ்வுலகில் பிறக்கின்றார். இவருடைய பிறப்பால் நாம் முதல் பெற்றோரிடம் இருந்து பெற்றுக் கொண்ட பாவம் நிறைந்த வாழ்வு மாற்றம் அடைந்து, மேன்மை பெறுகின்றது. முதல் ஏவாள் தண்டனை-யைக் கொண்டு வந்தாள். மரியாவே மனிதகுல மீட்பைக் கொணர்ந்தாள். முதல் ஏவாள் ஏதேன் தோட்டத்தில் இறைவனின் கட்டளையை மீறிப் பாவம் செய்து மனித குலத்துக்கு சாபத்தையும், துன்பங்களை யும் தண்டனையையும் கொண்டு வந்தாள். புனித கன்னிமரியா இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இறைவனின் திட்டத்துக்குத் தன்னை விட்டுக் கொடுத்து உரிமை வாழ்வை நாம் பெறக் காரணமானவள். அலகையின் சூழ்ச்சியால் பாவம் செய்த ஏவாள் இறைவனின் அருள் உயிரை இழந்தாள். அலகையைத் தன் பாதங்களால் மிதித்த கன்னி மரியா, எம்மைக் காத்து இறைவனோடு எம்மை நெருக்கமாக்கினாள்.

**கிறிஸ்தவ மதிப்பீடுகளின் பொக்கிஷம்**

புனித கன்னிமரியா எமக்கெல்லாம் மேல்வரிச் சட்டமாகவும், நாம் எப்படி வாழ வேண்டும் என்பதையும் வாழ்ந்து காட்டினாள். மீட்பின் திட்டம் அவளுக்கு அறிவிக்கப்பட்டபோது, தாழ்ச்சியோடு அதை ஏற்றுக் கொண்டு "இதோ உமது அடிமை" என்றவள் இறுதிவரை பிரமாணிக்கமாக வாழ்ந்-தாள். பாலக இயேசுவைக் கருவிலே தாங்கியவுடன் தூய ஆவியாரின் அருள் வளங்களால் நிறைந்து தன்னுடைய வாழ்வை ஒருபடி மேலே உயர்த்துகி-ன்றாள். தன்னுடைய முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரிக்கின்றாள். மலடி எனப்படும் அவளுக்க இது ஆறாம் மாதம். என்ற வானதூதரின் வாக்கு மரியாவ-ின் உதவி செய்யும் ஆர்வத்தைத் தூண்டுகின்றது. முதிர்ந்த வயதில் கருவுற்றிருக்கும் தனது உறவி-னரான எலிசபெத்துக்கு உதவி செய்ய விரைகின்றாள். தான் இறைவனின் தாய் என்ற மமதை இல்லாமல் மூன்று மாதங்கள் அவளோடு தங்கியிருந்து உதவிக்கரம் நீட்டுகின்றாள்.

**துயர் களையும் அன்னையாக**

அன்னை எப்போதும் துயர் களைகின்றவள். அடுத்தவர் துன்பங்களை, தேவைகளைத் தன்னுடைய தேவையாக உணர்கின்றவள். கானாவூர்த் திருமணம், தாயும் தனயனுமாக மரியாவும் யேசுவும் அங்கே பிரசன்ன-மாக இருக்கின்றனர். அழைக்கப்பட்டோருக்கான பந்தி நடைபெறுகின்றது. இரசம் தீர்ந்து போகின்றது திருமண வீட்டார் திகைத்து நிற்கின்றனர். அவமானப்பட்ப் போகின் றோம் என்று அங்கலாய்க்கின்றனர். கன்னிமரியா இதை அவதானிக்கின்றார். உடனடியாக அவர்களின் தேவையை அவர்கள் சந்திக்க இருக்கும் அவமானத்தை தன்னுடைய துயரமாகக் கருதுகின்றாள். இறைமகன் இயேசுவிடம் கே-ாரிக்கை விடுக்கின்றாள். முதல் அற்புதம் அங்கே நிகழ்கி-ன்றது. சாதாரண தண்ணீர் முதந்தர இரசமாக மாறுகின்றது. அன்னையின் பரிந்துரையால் துயர் நீங்கி, மகிழ்வு நிறைகி-ன்றது.

**மீட்பின் பாதையில் அன்னை மரியா**

இறைமகன் யேசுவின் மீட்பின் பாதையிலும் அன்னை மரியா கூட வழி நடக்கின்றாள். தன்னுடைய மகன் வானகத் தந்தையின் மீட்புத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற பக்கபலமாக இருக்கின்றாள். பிலாத்துவின் அரண்மனை, அன்னாஸ், கைப்பாசின் விசாரணை முற்றம் கரடுமுரடான துன்பம் நிறைந்த கல்வாரிப் பாதையிலும் கூட வழிநடக்கின்றாள். தன்னுடைய மகன் விழுந்து எழும்பி, பெலவீனமான நிலையில் நடக்க முடியாமல் இருக்கும் போது தன்னுடைய பார்வையால் உந்து சக்தி கொடுக்கின்றாள். இறுதியில் கல்வாரியில் யேசுவின் தியாகப் பலியில் பங்கெடுத்து எமக்கெல்லாம் தாயாகத் தரப்படுகின்றாள்.


**இறைவனால் மகிமைப்படுத்தப்பட்டாள்**

அன்னை மரியாவின் புனிதமான சாட்சியம் நிறைந்த வாழ்வு இறைவனுக்கு உகந்ததாக இருந்ததினால் அவர் இறைவனால் மகிமைப்படுத் தப்பட்டாள். அவளுடை-டய உடல் அழிவுறுவதை விரும்பாத இறைவன் உடலோடும், ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்குள் எடுத்துக்கொண்ட-ார்.
1954ம் ஆண்டு திருத்தந்தை 12ம் பத்திநாதர் அவர்கள் கன்னிமரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகம் எடுத்துக் கொள்ளப் பட்டாள் என்ற விசுவாச சத்தியத்தைப் பிரகடனப்படுத் தினார். அத்தோடு விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டி, அவளின் மேன்மையை இறைவன் மெருகூட்டினார். அமல உற்பவியாகப் பிறந்து மீட்பின் வரலாற்றில் இடம்பிடித்த அன்னை எமக்கு மாபெரும் கொடையாகவும் ஆசீர்வாதமாகவும் திகழ்கின்றாள்.

**முடிவாக**

அன்னையின் புனிதமான வாழ்வு எமது வாழ்வோடு இரண்டறக் கலக்க வேண்டும். அவளிடம் காணப்பட்ட கிறிஸ்தவ நெறிமுறைகளும், விழுமியங்
களும் எமது வாழ்வில் வாழப்பட வேண்டும்.இறை மகன் யேசுவின் இறையாட்சிக் கனவை நனவாக்க இறுதிவரை உண்மையாக வாழ்ந்த அன்னை எம்மோடு என்றும் இருக்கின்றாள். எம்மோடு கூட வழிநடக்கின்றாள். எமக்காகப் பரிந்துரைக்கின்றாள் என்பதை நாம் ஏற்றுக்கொ-ாண்டு அவளின் அன்புப் பிள்ளைகளாகவும், கிறிஸ்-துவின் உண்மைச் சீடர்களாகவும் வாழ்வோம்.

**இ.அ.அமலரட்ணம்**



# தனிமை வரமா? சாபமா?

*பூமியின் முதல் பதிவு தனிமை!*
*வாழ்வின் இறுதிப் பதிவும் தனிமை!*

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தில் உறவுகள் மலர்கின்றன் உன்னதம் பிறக்கின்றது. தனிமை வேரறுக்கப்பட்டு, பிறரோடு இணைந்து பயணிக்கும் பேரின் பம் கிடைக்கிறது. பேரின்பம் கிடைத்துவிட்டதே என்று ஆனந்தப் பரவசம் அடைந்தாலும், அன்றாட வாழ்வில் அவ்வப்போது இந்தத் தனிமை தொட்டுவிட்டுச் செல்லும் அனல் காற்றுபோல இதயத்தை வருடித்தான் செல்கிறது.

உறவுகளால் கைவிடப்படும்போது, உணர்வுகள் மதிக்கப்படாதபோது விரக்தியின் விளிம்பில் தள்ளப்படும்போது தோல்வியில் கலங்கி நிற்கும்போது குடும்ப வாழ்வு சீர்குலை யும் போது கண்டுகொள்ளப்படாமை அதிகரிக்கும்போது, கருத்துகள் மதிக்கப்படாதபோது, எல்லோராலும் வெறுக்கப் படும் போது, பிறப்பால் ஒதுக்கப்படும்போது, கூட்டத்தின் மத்தி யில் அவமானப்படும்போது, அன்பை அலட்சியப்படுத்தும்போது, குழுவாகச் செய்யும் பொறுப்புகளைத் தனியாகச் செய்யும் சூழல் நேரிடும்போது, உடல் நோயில் உறவுகள் உடனிருக்காதபோது…!

இந்தத் தனிமை உயிர்க்கொல்லியாக இதயத்தை ஊடுருவி, உயிரோடு மனித மனங்களைப் புதைத்துக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை. தனிமை வரமா? சாபமா? என்பது அவரவர் மனநிலையை, சூழ்நிலையை, அனுபவத்தைப் பொறுத்து அமைகிறது. பிரச்சினைகளை எப்படி உற்றுநோக்குகிறோம்? மனப்பக்குவத்துடன் அதை எப்படிக் கையாள்கிறோம்? என்பதன் அடிப்படையில் தான் வரமும் சாபமும் நம் கண்முன் வைக்கப்படுகின்றன.

**தனிமை தந்த வலிகள்**

"மனிதன் தனியாய் இருப்பது நல்லது அன்று" என்று மனிதனுக்குத் துணையாகப் பெண்ணைப் படைத்தார் இறைவன். "இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்து பயணிப் போம்" என்று அவர்கள் கொடுத்த திருமண வாக்குறுதி சில குடும்பங்களில் இறுதிவரை நிலைத்திருப்பதில்லை. "நான்" என்ற ஆணவமும், விட்டுக்கொடுக்காத மன நிலையும், பொருளாதாரப் பின்னடைவுகளும், தூய அன்பற்ற நிலையும், பிரமாணிக்கமின்மையும், தரக்குறைவான வார்த்தைகளும் குடும்ப வாழ்வைக் கேள்விக்குறியாக்கி விடுகின்றன. விளைவு - தனிமை வாழ்வு! கணவனால், மனைவியால், பிள்ளைகளால், கைவிடப்பட்ட நிலை. முதியோர் இல்லங்களிலும் தெருவோரங்களிலும் வாழ்கின்ற அவல நிலை. இதற்கு என்ன காரணம்? சற்று ஆழ்ந்து சிந்தித்தால், "நான் பிறரால் அன்பு செய்யப்படவில்லை" என்ற எண் ணமே மேலோங்கி நிற்கின்றது. தனிமை தந்த வலி-களை அனுபவித்தவர்கள் மட்டுமே உணர முடியும்.

**தனிமை தந்த பாடங்கள்**

சில நேரங்களில் தனிமை வலியைத் தந்தா லும் சுயசிந்தனை, சுயஒழுக்கம், சுயகட்டுப்பாடு, சுய வளர்ச்சி, சுயஉணர்தல் ஆகியவற்றின் தளமாகத் தனிமை உணரப்படுகிறது. நம்மை நாம் புரிந்து கொள்வதற்கும் நாம் எந்த நிலையில் இருக்கிறோம்? என்ற தெளிவு பெறுவதற்கும், மன அமைதியுடன் வாழ்வதற்கும், உறவுகளைப் புரிந்துகொள்வதற்கும், உறவின் மகத்துவம் உணர்வதற்கும், தன்னம்பிக்கை யுடன் வாழ்வதற்கும், படைப்பாற்றல் திறனுடன் செயற் படுவதற்கும் இந்தத் தனிமை நமக்குப் பல பாடங் களைக் கற்றுத்தருகின்றன.

தாவீது அரசர் சவுல் அரசனின் பைத்தியக் காரத்தனத்தால் தனிமைக்கூண்டில் சிக்கியபோது மனைவியை இழந்தார். நண்பனை இழந்தார். உறவினர்களை இழந்தார், படை வீரர்களை இழந் தார். அனைத்தும் இழந்த நிலையில் தனிமையாக நாட்டை விட்டே தப்பி ஓடினார்.

(தொடர்ச்சி 6ம் பக்)

# மறைப்பணி புரிந்த மாமேதை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

**ஏழையின் நண்பன்**

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் சிறுவயதில் இருந்தே ஏழைகளோடும், இல்லாதவர்களோடும், 'தாழ்த்தப்பட்டவர்களோடும்' மரியாதையுடனும், மதிப்புடனும் பேசவும், பழகவும், நேசிக்கவும் கற்றுக் கொண்டார்.

சிறுவயதில் நடந்த ஒரு சம்பவத்தினை அச்சுவேலியைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறுயிருக்கி றார்: " 'நீர் தாழ்த்தப்பட்ட வர்களை எடே, எடி, வா, போ என்று கூப்பிடாமல் சகோதர நேசத்துடன் தம்பி, தங்கைச்சி இங்கே வாரும் என்று அழைத்தால் ஆண்டவருக்கு அதிக பிரியமாயி ருக்கும்' என்று போதனை புகட்டி விட்டார். அந்த நாள் தொடக்கம் இற்றைக்கும் அப்படியே பேச்சிலும், கிரியைகளிலும் நடத்து வருகிறேன்."


ஏழைகளுக்கு எதையாவது கொடுத்துத் திருப்திய டைகின்ற உலகிலே ஏழைகளுக்காக, எளியோருக்காக வாழப் பிறந்தவர் ஒரு சிலரே. அதிலும் ஏழைகளுக்காக ஏழையாக வாழ்பவர் இன்னும் மிகச் சிலரே. அதில் சுவாமி ஞானப்பிரகாசர் தனித்து வமானவர். ஏழைகள், எளியவர்கள், சமுதாயத்தினால் தாழ்த்தப்பட்டவர்கள் குரலாக நின்று வாழ்நாள் முழுவதும் உழைத்த ஈழநாட்டின் பெரும் மனிதன்தான் நமது நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்.

உயர் சாதியினர், கீழ் சாதியினர் என்ற சமூகப் பாகுபாடு தலைதூக்கி இருந்த நேரமது. இத்தீராத பரம்பரை நோய் தாம்வாழும் பரந்து விரிந்த தமிழ்ச் சமூகத்தில் மட்டுமல்லாது, தான் நேசித்து அன்புசெய்த திருச்சபையாகிய இறை குழுமத்தையும் பற்றிப்பிடித்ததை எண்ணி வருந்தினார். மனம் வெதும்பினார்.

இச்சவாலைத் துணிவுடன் எதிர்கொண்டார். வெறுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்கள் வரிசையில் நின்று தமது வாழ்வை அர்ப்பணித்தார். நோயாளிக்கு வைத்தியமும், நோய்க்கு மருத்துவமும் செய்தார். அவருடைய 25 வருட கத்தோலிக்க வளர்ச்சி [XXYears of Catholic Progress] என்ற நூலில் தமிழரின் மாறாத இச்சமூக நோயினை வேதனையுடன் குறிப்பிடுகிறார். "In Jaffna you may work other miracles but not the one of dissipating the unchristian atmosphere of 'caste' which may be said to permeate the very being of the Tamil man - such is the tyranny of prejudice nurtured through centuries and millenniums!" ("கிறிஸ் தவமல்லாத, மறைக்க முடியாத சாதி என்ற சூழமை வைத் தவிர, யாழ்ப்பாணத்தில் வேறு ஏதாவது புது மைகள் செய்யலாம். இது, பல நூற்றாண்டு, ஆயிர மாண்டு காலமாகத் தமிழனின் சுயத்தில் வளர்க்கப்பட்ட கொடூரமான முற்சார்பு எண்ணமாகும்")

தமது ஐம்பாண்டு அனுபவத்தைக் கூறும் சுவாமிகளின் வார்த்தைகள் பல வருடங்கள் கழிந்தும் இன்றும் அவை எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. எம் உள்ளங்களை ஊடுருவுகின்றன. "சாதிகள் இல்லையடி பாப்பா குலத் தாழ்ச்சி. உயர்ச்சி சொல்லல் பாவம்" என்று பாடும் மகாகவி பாரதியாரின் வரிகளும், "ஓடும் குருதியிலும் வழிந்தோடும் கண்ணீரிலும் தேடிப் பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோ?" என்று பாடும் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் வார்த்தைகளும், "தாழ்த்தப்பட்டவர்களின் அப்போஸ்தலரின்' சாதிக் கலப்பற்ற, சமத்துவ, சகோதரத்துவ சமூகத்தை உருவாக்க வலுச் சேர்க்கட்டும். "வலியோரை வாழ்த்தி, எளியோரைத் தாழ்த்தும் உலகே உன் செயல்தான் மாறாதா?" என்று பாடும் கவிஞனின் ஏக்கம் தீருமா?

"இனி உங்களிடையே யூதன் என்றும், கிரேக்கன் என்றும். அடிமை என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும், ஆண் என்றும், பெண் என்றும் வேறுபாடு இல்லை. இயேசுக் கிறிஸ்துவுக்குள் இணைந்துள்ள யாவரும் ஒன்றாய் இருக்கின்றீர்கள்" என்ற அருள்வாக்கு எம் வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்குமா? நற்செய்திப் பணி ஒரு புன்முறுவலிலேயே ஆரம்பிக் கிறது. இது அன்னை திரேசாவின் அன்பு சொரியும் வார்த்தைகள்.



சுவாமி ஞானப்பிரகாசர், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர். கல்வி கற்க அடிப்படை வசதி வாய்ப்புக் கள் இல்லாத பிள்ளைகளுக்கு கல்விக் கூடங்களை அமைத்துக் கொடுத்தார். தானே ஆசிரியராக இருந்து பல இடங்களில் ஆசிரியர் பற்றாக் குறையை மட்டுமல்ல, ஆசிரியர் இல்லாக் குறையையும் நிவர்த்தி செய்தார். மர நிழல்களும், ஓலைக் குடிசைகளும், கொட்டில்களும் ஏழைப்பிள்ளைகளின் கல்விச் சாலைகளாக அன்று அமைந்தன. இவ்வாறு பன்னிரண்டு பாடசாலைகள் அவருடைய கவனிப்பில் ஆறுதலடைந்தன.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நீர்வேலிக்கு அருகில் ஒரு தொகுதி நிலத்தை வாங்கி மக்களைக் குடியமர்த்தினார். அப்போது யாழ். ஆயராய் இருந்த யூலன் ஆண்டகை அவர்களின் பெயரையே அவ்வூருக்கு இட்டு 'யூலனூர்' என்றழைத்தார். வட பகுதியில் ஏழை மக்களின் நல்வாழ்விற்கு முதன்முதல் குடியேற்றத்தை உருவாக்கியவர் சுவாமி அவர்களே. ஏழைகள் ஏற்றம்பெற உகந்ததெனக் கருதும் எச்சந்தர்ப்பத்தையும் அவர் நழுவ விட்டதில்லை.

இவருடைய பணிகளுக்கெல்லாம் உதவிக்கரம் கொடுத்தவை மாட்டு வண்டியும், மிதி வண்டியுமே. மாட்டு வண்டியில் அவருக்கென்றிருந்த ஒரேயொரு சொத்தான அறிவுச் செல்வத்தை பெருக்கும் புத்தகங்களை எடுத்துச் செல்வார். 'சைக்கிளில்' பயணித்தால் ஆறுதலாக விரும்பிய இடத்தில் நின்று, மக்களைக் கண்டு, உரையாடி அவர்களின் உள்ளத்தில் இறையன்பைத் தூவலாம் என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

அதனால்தான் அவருடைய பணிக் களத்தின் போக்குவரத்தை இலகுவாக்க ஜேர்மனியில் ஒரு கத்தோலிக்க ஸ்தாபனம் நன்கொடையாகக் கொடுத்த மோட்டார் வண்டியைக்கூட வாங்க மறுத்துவிட்டார். ஏழைகளோடு ஏழையாக வாழ சுவாமி அவர்கள் தேர்ந்து கொண்ட யுக்தியே இது. சுவாமி அவர்களின் எளிமையையும், ஏழைகள் பால் கொண்ட அன்பையும் இறையரசின் பணிவாழ்வில் இன்றும் பணியாற்றும் மதுரநாயகம் அடிகள் தம் வாழ்க்கைப் புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடுவதை 'நெஞ்சே நினை' என்ற நூலில் வித்துவான் அடைக்கலமுத்து பின்வருமாறு பதிவுசெய்கிறார்: "ஞாயிறு பூசை முடிந்தவுடன் ஏழைகள் அவருடைய வருகைக்காகக் காத்து நிற்பார்கள். அவர்கள் எதைக் கேட்டாலும் கொடுக்கப் பின்னிடார். பெட்டியிலுள்ளது, சட்டைப் பையிலுள்ளது. உண்டியற் பெட்டியிலிருப்பது ஆகிய எல்லாப் பணமும் ஏழைகள் கைக்கு மாறிவிடும். சிலவேளைகளில் அடுத்த கோவில் களில் உள்ள உபதேசிமாரை அனுப்பி. உண்டியற் பெட்டிகளிலிருக்கும் காசைக்கூட எடுப்பித்துக் கொடுப்பார். இப்படியாக வறியவர்களின் வாழ்க்கையை உயர்த்தி, தம்மை வறுமை நிலைக்கு ஆக்கிக் கொண்டார். நெடுங்காலப் பழக்கத்திலிருந்த சுருட்டுக் குடியைக் கூட பணக் கஸ்டத்தினால் முற்றாக நிறுத்திவிட்டார்".

(தொடரும்...)

அருட்பணி. செ.அன்புராசா அ.ம.தி

## தீர்ப்பிடாதே!

வீதியில் நூல் பிடித்ததுபோல் தண்ணீரால் கோடு போட்டுக்கொண்டு போன குடிநீர் வண்டியைப் பார்த்தபோது டேவிட்டுக்கு கோபம் கோபமாக வந்தது! வண்டியில் பொருத்தப்பட்டிருந்த தண்ணீர்க் குழாயை ஒரு சுற்றுச் சுற்றி இறுக்கி மூடியிருந்தால் இத்தண்ணீர் கொட்டியிருக்குமா? இந்தக் குடிநீரைச் சுத்தப்படுத்த எத்தனை இலட்சம் ரூபாவை அரசு செலவழித்து குளோரின் இட்டு சுத்திகரித்திருப்பார்கள். இது பொதுச் சொத்தல்லவா? நானும் நீங்களும் கொடுத்த வரிப்பணமும் அல்லவா? தண்ணீர்க் குழாய் சரியாக மூடாமல் குடிநீர்த்தாங்கி லொறியின் சாரதியை இழுத்து வைத்து நாலு சாத்து சாத்தவேண்டும் போல் உள்ளது என உள்ளம் குமுறிக்கொண்டான் டேவிட். அவனின் கோபம் தலைக்கு ஏறுவதற்கு முன் லொறி தூரத்தில் ஓடி மறைந்து விட்டது.

அக்கோபத்துடன் டேவிட் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். துவிச்சக்கரவண்டியை தாழ்வாரத்தில் நிறுத்திவிட்டு வீட்டுக்குள் நுழையப்போன டேவிட்டின் செவிகளில் அவரது மனைவி தன் மகனிடம் புலம்பிக்கொண்டிருப்பது கேட்டது! *"உன் அப்பனுக்கு எத்தனை முறை சொல்லுவது, அவர் புத்தியில் ஏறாது, சமையலறை தண்ணீர்க் குழாயை திருத்தி விடுமாறு சொல்லி ஒரு வாரமாகிறது. இன்னும் அவர் குடிநீர்க் குழாயைத் திருந்தவில்லை. இப்படி ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு தந்தை இருந்தால் ஏன் தண்ணீர்ப் பஞ்சம் வராது?"* என்று மனைவி கூறுவதைக் கேட்டபோது யாரோ கன்னத்தில் அடிப்பது போல இருந்தது டேவிட்டுக்கு! அப்போதே கையோடு சென்று புதிய குடிநீர்க் குழாயைப் பொருத்தி சீர்செய்து விடுகின்றார்.

**ஒவ்வொருவரும் சரியாக நடந்துகொண்டால் இவ்வுலகில் தீர்ப்பிடவும், தீர்ப்பிடப்படவும் யாரும் இருக்கமாட்டார்கள்.**

## தனிமை வரமா?...)

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும், மனம் தளரவில்லை. தனிமையின் பாடங்களைக் கற்றுக் கொண்டு இறைவன்மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு "இறைவன் என்னைக் காப்பாற்றுவார், மீண்டும் இந்த அரசாட்சியில் என்னை நிலை நிறுத்துவார்" என்ற நம்பிக்கை உணர்வுடன் தாவீது செயற்பட்டார் வெற்றியும் பெற்றார். "தனிமைப் படுத்தப்பட்டோம்" என்று தயங்கத் தேவையில்லை. தனிமையிலும் இனிமை காணலாம். தனிமை சாபம் அல்ல.அவற்றை வரமாக மாற்றியர்களும் நம் மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். இயேசுவின் தனிமை பாலைவனத் தனிமை, கருக்கலில் தனிமை, விடியற் காலத் தனிமை இயற்கையின் எழில் அழகில் தனிமைச் சூழ்ந்த காடுகளில் தனிமை... எனத் தொடர்கிறது. பாலைவனப் பயணம் மிகக் கொடியது. மனித வாடையே இல்லாத இந்தப் பாலைவனத் தனிமையை இயேசு ஏன் விரும்பினார்? இஸ்ரயேல் மக்கள் 40 ஆண்டுகள் பாலைவனப் பயணத்தில் தம்மைத் தூய்மையாக்கி, பாலும் தேனும் பொழியும் கானான் தேசத்தை அடைகிறார்கள்.

இயேசுவும் தம் பணிவாழ்வின் அடையாளமாக மானுடச் சமூகத்தைத் தூய்மையாக்க, பாவவாழ்வில் இருந்து மக்களைப் பாதுகாக்க, யாவே இறைவனை நோக்கி மக்களை வழிநடத்த பாலை நிலத்துக்குச் செல்கிறார் (மாற்கு 1:13, மத் 14:13).சமூகப் பணி, மீட்புப்பணி, போதிக்கும் பணியின் முன் அடையாளமாகப் பாலைவனத் தனிமையை இயேசு தேடிச்சென்றாலும், அங்கும் மூன்று ஆன்மிக எதிரிகளைச் சந்திக்கின்றார். அவை, உலகம், சாத்தான். ஆசையைத் தூண்டுதல் சாத்தானின் வேலை. "இந்தக் கல்லை அப்பமாக மாற்று, நீர் இறைமகன் என்றால் கீழே குதியும் நீ நெடுஞ் சாண் கிடையாக என்னை விழுந்து வணங்கினால் இந்த அரசை உனக்கு உரிமையாகத் தருவேன்" என்ற மூன்று ஆன்மிக எதிரிகளை இயேசு சந்திக்கின் றார் (மத் 4:3-8). இங்கு இயேசு உலகப் பசிக்கும் உடல் பசிக்கும் இடம் கொடுக்கவில்லை. ஆன் மிகப் பசிக்கு முதலிடம் கொடுத்து ஆன்மிக எதிரிகளை வென்றெடுக்கின்றார். அவர் எடுத்த முதல் அடியே இறையாட்சியின் வெற்றிக்கான அடித்தளமாக அமைகிறது. இயேசுவின் தனிமையில் ஆன்மிக எதிரிகளை வென்றெடுக்க நாம் தயாரா? உயர் மலையின் உள்ளத் தனிமை

**மலை - இறைப்பிரசன்னத்தின் அடையாளம்.**

இறைவன் உயர் மலையில் வீற்றிருந்து மக்களைக் கண்ணோக்குகிறார் என இஸ்ரயேல் மக்கள் நம்பினர். சீயோன் மலையில்தான் மனித ஒழுக்கங்களைச் சீர்படுத்தும் பத்துக்கட்டளைகள் யாவே இறை வனால் மோசேவிடம் கொடுக்கப் பட்டன. மலை இறையுறவின் சங்கமம், எலியா இறைவாக்கினர் கார்மேல் மலையில் யாவேதாம் உன்னத இறைவன் என்பதை எண்பித்துக்காட்டுகிறார். இறைமகன் இயேசுவும் உன்னத இறைவனின் உறைவிட மாம் மலையை நோக்கி தனிமையான பயணத்தை மேற்கொண்டு செபிக்கிறார். மலைமீது ஏறி அமர்ந்து பேறு பெற்றவர்கள் யார்? என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

இயேசுவின் தனிமையில் ஞானம் பிறந்தது. சுய பரிசோதனைக்கான தெளிவு கிடைத்தது. இறைவனின் மீட்புத் திட்டத்திற்கு எதிர்வரும் சவால் களைத் துணிவோடு எதிர்கொள்ள மன வலிமை கிடைத்தது. மக்களின் உடல் நோய்களைக் குண மாக்கக்கூடிய ஆற்றல் கிடைத்தது. ஆழ்ந்த இறை யனுபவத்தின் வழியாகக் கடவுளின் அருள் கிடைத்தது. "இவரே என் அன்பார்ந்த மகன்" என இறைவனே சான்றுபகரும் பேரானந்தம் கிடைத்தது.

ஆகவே, இயேசுவின் தனிமையை நமதாக்குவோம். நாமும் படைப்பாற்றல் திறன் மிக்கவர்களாக, புதுமைச் சிந்தனைகளை வரவேற்பவர்களாக, சுய அறிவும் சுயதெளிவும் கொண்டு "இப்படித் தான் வாழ வேண்டும்" என்ற கொள்கை உணர்வுடன் செயற்படுபவர்களாக மாறுவோம்.

**இறுதியாக....**

தனிமை நமக்கு மனச்சிதைவை உண்டாக் கும் போது, நம் மனித ஆளுமையைப் பாதிக்கும் போது, மனஅழுத்தம் குடிகொள்ளும்போது, கைவிடப் பட்ட நிலை உருவாகும்போது, "வாழத் தகுதியற்ற வர்கள்" என்ற எண்ணம் தோன்றும்போது நாம் சோர்ந்துபோக வேண்டாம். இயேசுவின் தனிமையை நமதாக்குவோம். நம் மனநிலையில் மாற்றத்தைக் கொண்டு வருவோம். தனிமையை வரமாகப் பார்க் கும் மனப்பக்குவத்தை வளர்த்துக்கொள்வோம். சத்தங்களற்ற நிசப்தத்தின் சிறப்பைக் கண்டுணர் வோம். மெல்லிய தென்றல் காற்றில் இறைவனோடு உரையாடுவோம். தனிசெபத்தில் ஆன்மிக இறையனுபவம் பெறுவோம். தனிமையைச் சாபமாக அல்ல, வரமாகப் பார்ப்போம்!

# திருச்சிலுவையின் மகிமைக்காக வாழுகின்ற திருச்சிலுவைக் கன்னியர்கள்



திருச்சிலுவையின் மகிமையின் திருநாள் புரட்டாதி 14ம் திகதி யன்று முழு உலக திருஅவையினால் நினைவுகூர்ந்து சிறப்பிக்கப்படுகின்றது. இறைவன் நமக்காக தம் ஒரே மகனை திருச்சிலுவையில் பலியாக்க திருவுளங்கொண்டார். ஏனென்றால் பாவத்தினால் இறையுறவை முறித்த மனித குலத்துடன் இறைவன் அன்புறவை மீளவும் ஏற்படுத்தி எம் ஒவ்வொருவருக்குள்ளும் இறைபிரசன்னத்தை ஏற்படுத்த விரும்பினார்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டதால் சாவு தோற்கடிக்கப்பட்டு உயிர்ப்பு வெற்றி பெற்றது. மறுவாழ்விற்கான விண்ணகக் கதவு திறக்கப்பட்டது. இதனால் திருச்சிலுவை மனித குலம் அனைவருக்கும் நம்பிக்கையினதும் மீட்பினதும், இரட்சிப்பினதும் அடையாளமாக மாறியது. இயேசு சிலுவையில் மரித்து உயிர்த்ததினால் சிலுவை வெற்றியின் சின்னமாக மாறியது. திருச்சிலுவை இறையன்பின் ஆழத்தையம், பாவ அடிமைத்தனத்திலிருந்து மனிதகுலத்தை மீட்டதையும், மீண்டும் இறையுறவு புதுப்பிக்கப்பட்டதையும் சித்தரிக்கின்றது.

7ம் நூற்றாண்டு காலப்பகுதியில் உரொமை நகரின் அரசனாவிருந்த கொன்ஸ்ரன்ரைன் அவருடைய தாய் Helana வின் துணையுடன் சிலுவை உட்பட கிறிஸ் தவ வரலாற்றுச் சின்னங்களைத் தேடியதன் பலனாக 326 இல் கண்டுபிடிக்கப்பட்டன. இயேசு பாடுபட்ட சிலுவை, அவரை அறைந்த ஆணிகளுடனும், JNRJ என எழுதப்பட்ட வாசக பட்டையுடனும், இரு கள்வரின் சிலுவைகளுடனும் ஜெருசலேமில் ஹெலேனாவால் கண்டுபிடிக் கப்பட்டு பாதுகாக்கப்பட்டன. 335 காலப்பகுதியில் சிலுவை வணக்கமும் மரியாதை செலுத்தலும் காணப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

ஆயினும் பேசியன் சமூகத்தினரினால் இச்சிலுவை கைப்பற்றப்பட்டு சிறிது காலம் சிலுவை வணக்கம் மறைந்து போயிருந்தது. மீண்டும் 629 இல் Heraclius அரசன் காலத்தில் சிலுவை பேசியரிடமிருந்து கண்டெடுக்கப்பட்டு உரோமைக்கு உரிய மரியாதை வணக்கத்துடன் கொண்டுவரப்பட்டுத் தொடர்ந்து பாதுகாக்கப்படுகின்றது.

திருச்சிலுவையை மகிமைப்படுத்தல் என்பது திருச்சிலுவையை நம் நெஞ்சிலும், கழுத்திலும் தாங்கிச் செல்வது மட்டுமல்ல, சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நம் வாழ்வால் பறைசாற்றுவதுடன் இயேசுவைப் பின்பற்றித் தியாக வாழ்விற்கு முன்னுரிமை கொடுத்து ஏற்றுக்கொள்வதாகும்.

நவீன, விஞ்ஞான, டிஜிட்டல் தொழினுட்ப வளர்ச்சிப் படிகளில் தம்மைத் தொலைத்து வாழும் இன்றைய மானிடர், மனித மாண்பு மதிக்கப்படாத நிலையிலும், ஒழுக்க விழுமியங்கள் தெரியாதவர்களாகவும், இறை அச்சம், இறை நம்பிக்கை இல்லாதவர்களாகவும் வாழ முற்படுகின்றனர். சிலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதனால் துறவற அழைத்தல்கள் இனங்கண்டு கொள்ளப்படுவதில்லை. இளையோர்கள் எப்போதும் சுதந்திரமாக வாழ ஆசைப்படுவதால் துறவற சபைகளின் கட்டுப்பாடுகளும், தியாக வாழ்வும் புரிந்து கொள்ள முடியாததாக இன்று காணப்படுகின்றது. இதற்கு திருச்சிலுவைக்கன்னியர் துறவற சபையும் விதி விலக்கல்ல. எந்த நிலை வந்தாலும் ஏற்றுக்கொண்ட அர்ப்பண வாழ்வை சபையின் தனித்தன்மை குன்றாமல் முன்னோக்கி எமது சபை நகர்ந்துகொண்டிருப்பது இறைவனின் வழிநடத்துதலும் பராமரிப்பும் என்றால் மிகையாகாது.

திருச்சிலுவைக் கன்னியர்களாகிய நாம் “சிலுவையில் தான் மீட்பு” என்பதனை சபையின் விருதுவாக் காகக் கொண்டு 90 வருடங்களைக் கடந்து இலங்கை நாட்டிலே பல பிரதேசங்களில் பணிபுரிகின்றோம். 9 மறைமாவட் டங்களிலும் எமது சபையின் குழுமங்கள் ஊடுருவி மக்களோடு மக்களாக வாழ்கின்றோம். கல்விப்பணி, பாலர் பராமரிப்பு தொடங்கி உயர்கல்வி வரை நமது கன்னியர்களினது கல்வி புகட்டலிலும், முன்மாதிரிகை வழிகாட்டலிலும் மானிட உள்ளங்களுடன் இரண்டறக் கலந்துள்ளது.

அத்துடன் சுகநலப்பணி பின்தங்கிய மக்களுடன் நடமாடும் மருத்துவசேவையாகவும் நேயாளர் பராமரிப்புப் பணியாகவும், சமூகப்பணி, மறைக்கல்விப்பணி, இளையோரை வழிப்படுத்தல், உருவாக்கல் பணி, உளவள ஆற்றுப்படுத்தல் எனப் பல்வேறு பணிகளில் திருச்சிலுவையின் அருட்சகோதரிகள் இறையரசின் மதிப்பீடுகளையும், ஒழுக்க விழுமியங்களையும் சேர்த்து ஊட்டிப் பணிபுரிகின்றார்கள்.

**அருட்சகோதரி றோமலா அன்ரனி**

இளம் உள்ளங்களுக்கு கல்வியறிவை வழங்குவதன் மூலம் சிறந்த சமுதாயத்தை உருவாக் கும் நோக்கில் அன்னை பேணாடா மூலம் ஆரம்பிக்கப்பட்ட இச்சபை உலக அரங்கில் 180 வருடங்களைக் கடந்து பயணிக்கின்றது. இன்று உலக மயமாக்கலி லும் நவீன விஞ்ஞான தொழிநுட்ப மாற்றங்களுக்கிடையேயும் ஏற்படும் மாற்றங்களுக்கு முகம் கொடுத்து, திருச்சிலுவையின் அருட்சகோதரிகள் இலங்கையில் 22 பிரதேசங்களில் தமது குழுமங்களை நிறுவி வாழ்கின்றனர்.

திருச்சிலுவையைத் தாங்கிப் பல்வேறு சவால்கள், இடர்கள், தோல்விகள், வெற்றிகள், தட்டிக் கொடுப்புக்கள், விமர்சனங்கள் எனப் பல தடைகளையும், வளர்ச்சிகளையும் சந்தித்து வாழும் திருச்சிலுவையின் கன்னி யர் சபை மென் மேலும் வளர்ந்திடவும் இறையழைத்தல்கள் பெறவும் உறுதுணையாக இருப்பது எமது எதிர்பார்ப்பாகும்.

## நீங்கா நினைவில் 6ம் ஆண்டு / நீங்கா நினைவில் 2ம் ஆண்டு



எங்கள் அம்மா அப்பா
உங்கள் உலகம் உடைந்து போய்
ஆண்டுகள் சில உருண்டோடின,
தேடுகிறோம் உம் போல்
இங்கே யாருமில்லையே
ஆனாலும்
உம் நினைவுகளை சிறைப்படுத்தி
உங்கள் முகங்களை
பதியவிட்டு செல்கின்றன
எங்களின் தனிமைப் பொழுதுகளும்
கனவுகளும்
உங்களின் செப மழை
எங்கள் இதயங்களையும்
இப் பூமியையும் நனைக்கட்டுமே
நீவீர் ஆண்டவர் தரிசனத்தில்
ஆறுதல் , அமைதி பெற பிரார்த்திக்கின்றோம்

அன்பான ஆண்டவரே!
இறந்து போன எங்கள் பெற்றோருக்கு என்றும்
உமது மாட்சியின் வல்லமையினால் புனிதர் தோழமையில்
இடமளித்து நித்திய இளைப்பாறுதலை அளித்தருள்வீராக – ஆமென்



அமரர்
**மரியாம்பிள்ளை பேரின்பநாதன்**
04.12.1940 – 13.09.2019

அமரர்
**பேரின்பநாதன் தவமணி**
23.12.1947 – 02.09.2023

குடும்பத்தினர்

## நீங்கா நினைவில் 2ம் ஆண்டு



பிறப்பு – 09.06.2004 இறப்பு– 03.09.2023

அமரர். **பத்மநாதன் வசீகரன்**

‘நீர் தேர்ந்தெடுத்து உம் அருகில் வைத்துக் கொள்ளும் மனிதர் பேறு பெற்றோர்’ (தி.பா. 65:4)

சில்லாலை AD-99 குடும்பத்தினர்

## நீங்கா நினைவில் 1ம் ஆண்டு



22.06.1977 01.09.2024

அமரர். **நேசநாயகம் கென்ஸ்மோகன்**

‘உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்’ (யோவான் 11:25)

குடும்பத்தினர் AD-95 சேச்லேன் குப்பிளான், தெற்கு

## யாழ்.மறைமாவட்ட...

(04ம் பக்கத் தொடர்ச்சி...)

**நன்றி மற்றும் வாழ்த்துகள்**

இந்தக் கல்லூரியை உருவாக்கிய முன்னாள் யாழ் ஆயருக்கும், சிறப்பாக வழிநடத்தும் இன்னாள் ஆயருக்கும் கடினமான சூழல்களிலும் சேவை செய்த இயக்குநர்களுக்கும், எதுவித எதிர்பாரப்பும் இன்றி விரிவுரைகளை வழங்கிய குருக்கள் பொது நிலையினர் அனைவருக்கும் நன்றிகள். மேலும் தங்களது பிள்கைளை இந்தப் படிப்புக்கு அனுப்பிய பெற்றோருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**முடிவுரை**

இந்தக் கல்லூரியில் மூன்று ஆண்டுகள் படிக்கும் போது, இரண்டரை ஆண்டுகள் முடிந்தவுடன் டிப்ளோமா சான்றிதழும், மூன்றாம் ஆண்டு முடிவில் உரோமாபுரியின் ஊர்பானியா பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட இளம் கலைமானிபட்ட சான்றிதழும் வழங்கப்படுகிறது என்பது ஒரு குறிப்பிடப் படவேண்டிய ஒன்றாகும்.

ஆகையால், எங்கள் மறை மாவட்டத்தில் இயங்கும் இந்த அழகான இறையியல் கல்லூரி வளர்ச்சிக்காக அனைவரும் ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம். இது மேலும் பல சாதனைகளை எட்ட, திருச்சபைக்கும் பங்குகளுக்கும் இக்கல்லூரி உயிரூட்டமாய் விளங்கட்டும்.

## கச்சாயப் பிரதேசத்தில் புனித செபமாலை அன்னைக்கு புதிய ஆலயம்




மிருசுவில் கச்சாய் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த புனித செபமாலை அன்னை ஆலயக் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் அவ்வாலயத் திறப்பு விழா கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.ஜே.கிவ். ஜெயரஞ்சன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து புதிய ஆலயத்தை ஆசீர்வதித்துத் திறந்துவைத்துத் திருப்பலியை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

திருப்பலி நிறைவில் ஆலய நூற்றாண்டு விழாவை சிறப்பித்து நூற்றாண்டு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்களெனப் பலரும் கலந்துகொண்டனர். இவ்வாலயத்திற்கான அடிக்கல் 2022ம் ஆண்டு ஐப்பசி 07ம் திகதி முன்னைநாள் பங்குத்தந்தை அருட்தந்தை இருதய தாஸ் அவர்களின் காலத்தில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களால் நாட்டிவைக்கப்பட்டு தற்போதைய பங்குத்தந்தை அருட்தந்தை ஞ.து.ஞ. ஜெயரஞ்சன் அவர்களின் காலத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## உருத்திரபுரம் பங்கின் செல்வநகர் புனித அமைதியின் அரசி ஆலய வருடாந்த திருவிழா



உருத்திரபுரம் பங்கின் செல்வநகர் புனித அமைதியின் அரசி ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை ஜோண் கனீசியஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 23ஆம் திகதி நடைபெற்றது. 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழா திருப்பலியை யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் நற்கருணைவிழா திருப்பலியை வட்டக்கச்சி பங்குத்தந்தை அருட்தந்தை ராஜ்டிலக்சன் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

## அல்லைப்பிட்டி புனித யுவானியார் ஆலய வருடாந்த திருவிழா



தீவகம் அல்லைப்பிட்டி புனித யுவானியார் ஆலய வருடாந்த திருவிழா தீவக மறைக்கோட்ட முதல்வரும் பங்குத்தந்தையுமான அருட்தந்தை பேனாட் றெக்னோ அவர்களின் ஒழுங்குபடுத்தலில் ஆவணி மாதம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 28ஆம் திகதி வியாழக்கிழமை நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழா திருப்பலியை யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட அதிபர் அருட்தந்தை செல்வரட்ணம் அவர்களும் நற்கருணைவிழா திருப்பலியை நாரந்தனை பங்குத்தந்தை அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

## கிளிநொச்சிப் பங்கில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு



கிளிநொச்சிப் பங்கில் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை ஜெயக்குமார் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் ஆவணி மாதம் 25ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் 72 மாணவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டனர்.

## மல்வம் பங்கில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு



உடுவில் – மல்வம் பங்கு பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை அருட்செல்வன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 29ஆம் திகதி நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் 65 மாணவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தை பெற்றுக்கொண்டனர். திருப்பலி நிறைவில் பங்கில் இவ்வாண்டு மறைக்கல்வி பணியில் 25 ஆண்டு யூபிலியை நிறைவுசெய்யும் 4 மறையாசிரியர்களுக்கான நினைவுப்பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டதுடன் இத்திருப்பலியில் யாழ். கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவ கல்லூரி விரிவுரையாளர் அருட்தந்தை ரவிறாஜ் அவர்களும் இணைந்து செபித்தார்.

## புனித ஆரோக்கியநாதர் ஆலய வருடாந்த திருவிழா



யாழ். பேராலய பங்கிற்குட்பட்ட புனித ஆரோக்கியநாதர் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 27ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 26ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழா திருப்பலியை யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்பநல நிலைய இயக்குநர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை சத்தியசீலன் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

## புனிதர் நிலைக்கு கார்லோ அகுடிஸ்



அருளாளர் கார்லோ அகுடிஸ் வரும் செப்டம்பர் 07ம் திகதி புனித நிலைக்கு உயர்த்தப்படவுள்ளார். உலகெங்கிலும் நடந்த நற்கருணை புதுமைகளை இவர் இறப்பதற்கு முன்னர் இணையத்தளத்தில் பதிவிட்டவர். இவருக்கு 5 ஜூலை 2018 அன்று அருளாளர் பட்டம் இறந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் அளிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பம் இணையம் ஆகியவற்றின் பாதுகாவலர். நற்கருணை மீது ஆழந்த பக்தியுடையவர்,

## சிட்னியில் மடு அன்னைத் திருத்தல திருவிழா





சிட்னியில் போலந்திலிருந்து வருகை தந்த மறைப்போதக குருக்களினால் இரக்கத்தின் அன்னை யாத்திரை ஸ்தலம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இவ்யாத்தரைத் தலத்தில் பல்வேறு நாட்டவர்களின் யாத்திரைத் தலங்களை சித்தரிக்கும் சிற்றாலயங்கள் பல அமைந்துள்ளன.

அவ்வகையில் இலங்கை வாழ் அவுஸ்திரேலிய இறைமக்களால் மடுத்திருத்தல சிற்றாலயம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இச்சிற்றாலயத்தில் கடந்த ஆவணி 17ம் திகதி மடுஅன்னையின் திருவிழா மிகசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இத்திருவிழாத்திருப்பலியில் சிட்னி உட்பட அவுத்திரேலியாவில் ஏனைய பகுதிகளிலிருந்தும் இறைமக்கள் பங்கேற்று அன்னையின் இறையாசீரைப் பெற்றுக்கொண்டனர்.

## புதுப்பொலிவு பெறும் ஊர்காவல் பரலோக அன்னை ஆலயம்



ஊர்காவற்றுறை புனித பரலோக அன்னை ஆலயத்தின் திருத்தப்பணிகள் பங்குத்தந்தை அருட்பணி சாள்ஸ் ஜஸ்ரின் அடிகளார் அவர்களின் திட்டமிடலின் கீழ், பல நல்லுள்ளங்களின் நிதியுதவியுடன் பூரணப்படுத்தப்பட்டன. நூற்றாண்டைக் கடந்த இவ்வாலயம் இனப்பிரச்சினைகள், யுத்தங்களினால் சிதைவுகளுக்கு உள்ளான நிலையில் தற்போது 2025 ஆம் ஆண்டில் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு முழுமையாக வர்ணம் பூசப்பட்டு அழகுற காட்சியளிக்கின்றது.

## புனித ஹென்றியரசர் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்ட 'இறை அழைத்தல்" கருத்தமர்வு



இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்ட 'இறை அழைத்தல்" கருத்தமர்வு கடந்த 29ஆம் திகதி நடைபெற்றது. கல்லூரி அதிபர் அருட்தந்தை மைக் மயூரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை யூட் கரோவ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தமர்வில் மறைமாவட்ட, திருவுள பணியாளர் சபை மற்றும் அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தையர்கள் கலந்து தங்கள் பணிகள் தொடர்பாக கருத்துரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் 300 வரையான மாணவர்கள் கலந்துகொண்டனர்.


## பணியாளர்கள் தேவை

**புனித வளன் கத்தோலிக்க அச்சகத்திற்கு**

- கணனிதட்டச்சு, பக்கவடிவமைப்பு செய்யக்கூடியவர்கள்.
- புத்தகம் கட்டுதல்(Book Binding) ஆகிய வேலைவாய்ப்பு வெறிறிடங்கள் உள்ளன.

தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர்: 021 222 2378
0773043470


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு புரட்டாதி மாதம் 07ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.